சு. சிவபாதசுந்தரனார்

எழுதிய

# ஆறுமுகநாவலர்



Sivaramalingapillai, B.A.

தமிழில்

வை. ஏரம்பமூர்த்தி

சைவப்பெரியார்

சு. சிவபாதசுந்தரனார்

எழுதிய

# ஆறுமுகநாவலர்



தமிழில்

வை. ஏரம்பமூர்த்தி

1992

மூலம்:
ARUMUKHA NAVALAR

ஆக்கம்:
S. Shivapadasundaram B. A.
*1950*

தமிழில்:
**வை. ஏரம்பமூர்த்தி B. A.**
முன்னாள் ஆசிரியர்
யாழ். இந்துக் கல்லூரி.
**1992**

அச்சு:
திருவள்ளுவர் அச்சகம்,
593, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

விலை:
ரூபா 30/-

## வாழ்த்துரை

திரு எஸ். எம். சேதுகாவலர்
பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் (வடக்கு),
யாழ்ப்பாணம்.

செயற்கரிய செய்த சான்றோரை, தகைசான்ற பெரியோரை, கவிஞரை, கலைஞரை, எழுத்தாளரை, விதந்து போற்றியும், விழா எடுத்தும், பாராட்டியும், தக்கோர் குழுவினர் ஒன்றிணைந்து பட்டமளித்தும் பொற்கிழி வழங்கியும் பொன்னாடை போர்த்தியும் கௌரவிப்பது மரபு.

இது, அவரவர்கள் வாழ்நாளில் இடம்பெறுவது. இப் பெரியோர்கள் அமரத்துவமெய்தியபின், அவர்களை நினைவுகூர்ந்து உற்றார், உறவினர், நண்பர்கள், பெரியோர்கள் எடுக்கும் விழாவும் பலதிறப்படும்.

இம்முறையிலானதொன்றே இன்றைய நூல் வெளியீட்டு விழாவும்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடைய உயர்ந்த இலட்சிய வாழ்க்கை வரலாற்றைச் சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் அவர்கள் 1950 ஆம் ஆண்டு ஆங்கிலத்தில் எழுதிவெளியிட்டார். அக்கைந்நூலை 33 ஆண்டுகளுக்குப் பின், 1983 இல் வை. எரம்பமூர்த்தி அவர்கள் தமிழில் மொழிபெயர்த்து உதவினார்.

அமரர் க. சண்முகம் அவர்களது பிற்சந்ததியினர் அவர் அமரத்துவமெய்திய 36 ஆவது ஆண்டினதும் அவரின் ஜனன நூற்றாண்டினதும் விழா நினைவாக இந்நூலை அச்சேற்றி வெளியிட ஆண்டவன் அருள் பாலித்திருப்பது போற்றத்தக்கதே. உலகு வாழ் சைவ மக்கள் அனைவரும் இப்பணியினருக்குக் கடமைப்பட்டவர்களே.

## வாழ்த்துரை

சிவத்தமிழ்ச்செல்வி, துர்க்கா துரந்தரி
செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் செந்தமிழும் சிவ நெறியும் வளர்ந்து ஓங்குவதற்காக அவதாரம் செய்தவர் நாவலர் பெருமான். இறைவனால் காலத்தினாற் செய்த நன்றி யென்று இவருடைய அவதாரத்தைக் குறிப்பிடலாம். உலகிலேயே மிகச் சிறந்த மொழி தமிழ் என்பதும் தமிழர் கண்ட கடவுட் கொள்கை சைவம் என்பதும் வரலாறு காட்டும் உண்மை. ஆனால் காலப் போக்கில் இதன் வளர்ச்சியில் சில மாசுகள் புகுந்து விட்டன. இதனை அகற்றிச் செம்மை சேர்ப்பதற்காக அரும்பாடுபட்டவர் நாவலர் ஐயா. திருநீறு பூசியவன் இழித்துரைக்கப்பட்டதும் ஆங்கிலம் தெரியாதவன் அடிமை என்ற நிலைக்குத் தள்ளப் பட்டதும் அக்கால வழக்கமாக இருந்தன. இந்த நேரத்தில் தான் நாவலர் ஐயா குதித்து எழுந்தார்; பிரசங்கமாரி பொழிந்தார்; சைவநூல்களை வெளியிட்டார்; தமிழ் வசன நடையை ஆரம்பித்தார்; சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினார். இவற்றையெல்லாம் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் ஆங்கிலத்தில் ஒரு சிறிய நூல்வடிவில் எமக்குத் தந்துள்ளார். நாவலர் பெருமானைப் பற்றி இளஞ் சந்ததியினரும் அறிந்து கொள்வதற்கு இந்நூல் பேருத வியாக அமைந்துள்ளது. ஆங்கிலத்தில் வெளிவந்த இந்த நூலைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரியது. பயனுள்ள ஒரு நற்பணி இதுவாகும். நற்றமிழ், சைவம் வல்ல நாவலர் பணியை நாம் தொடர் வோம்.

## வாழ்த்துரை

கலாநிதி அ. சண்முகதாஸ்
தமிழ்ப் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.

சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் ஈழத்துத் தமிழ்க் கல்விமான்கள் எனக் கூறப்படுபவர்களுள் சிறப்பான இடத்தைப் பெறுபவர். அவர் ஆங்கில மொழியிலே நல்லை நகர் ஆறுமுக நாவலருடைய வரலாற்றை எழுதியுள்ளார். தமிழ்மொழி தெரியாத பிறமொழியாளர்களும் நாவலருடைய பணிகளையும் திறன்களையும் அறியும் வண்ணம் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்த வகையில் நாவலருடைய பெயரைத் தமிழர் பிரதேசத்துக்கு அப்பாலும் இட்டுச் செல்ல இந்நூல் உதவிவந்துள்ளது. இதனை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலே கடமைபுரிந்த அமரர் வை. ஏரம்ப மூர்த்தி அவர்கள் தமிழிலே மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

இத்தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிடுபவர்கள் அஞ்சல் திணைக்கள உயர்அதிகாரியாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற அமரர் கந்தப்பர் சண்முகம் அவர்களின் உறவினர்களாவர். அமரர் சண்முகத்தை அறிந்தவர்கள் அன்னாரை அன்புடனே நினைவு கூருகிறார்கள். அப்பெரியாருடைய நூற்றாண்டு ஜயந்தி நாளும் நாவலர் குருபூசை நாளும் ஒரே நாளாக வருவதால் அமரரின் குடும்பத்தினர் நாவலர் வரலாற்று நூலினை இந்நாளிலே வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைவது நியாயமே.

நூல் சிறப்புறவும் நூல் வெளியீட்டு விழா சிறப்புறவும் பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானை வழுத்தி என் பாரராட்டுக்களையும் வாழ்த்தினையும் வழங்குகிறேன்.

" வாழ்த்துவதும் வானோர்கள் தாம்வாழ "

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்னும் கொள் கையை உலகுக்கு அளித்த பெருமைக்குரியது எம் தமிழினம். திரைகடலோடியும் திரவியம் தேடிய எம் தமிழினத்தின் வழித் தோன்றலான அமரர் கந்தப்பர் சண்முகம் இலங்கை மாதாவின் மூளைப்பகுதியாய் அமையப் பெற்ற காரைநகரில்,வலந்தலையில் உயர் சைவ வேளாண் குலத்தில் 1882ஆம் ஆண்டு மார்கழி மாதம் நாலாம் நாள் சிதம்பரப் பிள்ளை. இலட்சுமி தம்பதிகளின் வேண்டுதலுக்கு ஈழத்துச் சிதம்பரனார் அருளிய செல்வனாய்ப் பிறந்தார்.

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பதற் கிணங்க இளவயதிலே கல்வியை வெகு சிரத்தையுடன் பயின்று, இலங்கைத் தபால் திணைக்களத்தில் சேர்ந்து 42 வருட கால சேவையை மக்களுக்காற்றினார். இவர் தபா லதிபராக, நுண்ணாய்வுப் பரிசோதகராக மேலும் ஏனைய தரங்களில் கனகச்சிதமாக நாட்டின் பல பகுதிகளிலும் சேவையாற்றி, இளைப்பாறும் பொழுது அதிஉன்னத பதவி யாகிய பெரும்பாக அதிகாரியானார்.

அவரின் நுண்ணாய்வுக் கோவைகள், அறிக்கைகள் திணைக்களத்தில் பின்னவர்க்கு வழிகாட்டியாக இன்றும் பேணிக் காக்கப்படுகின்ற தொன்றிலிருந்தே அன்னவரின் நுண்மாண் புலமையை அளவிடலாம்.

இப்பெரியாரின் பெயரால் நடக்கும் பணி பூரண வெற் றியடையச் சிதம்பரனாரை வேண்டி நிற்கின்றேன்.

# மொழிபெயர்ப்பின் முன்னுரை

வை. ஏரம்பமூர்த்தி
'குமாரவயல்'
'ருதிரோற்காரி. ஆனிமாமகம்
13-7-1983

இக்கைகந்நூலின் ஆசிரியரான சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரனார் தமது முன்னுரையிலே குறிப்பிட்டிருந்தது போல இந்நூலுக்கு ஒரு தமிழ் வடிவம் யாண்டும் வெளிவந்ததாக நான் அறியவில்லை.

" நாவலர் " என்ற அடைமொழியில்லாமல் கூறினால் அது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலரவர்களையே குறிக்கும் என்பதுகூட நம்மவரில் பலருக்குத் தெரியாது. அங்ஙனமிருக்கும்போது இனிவரும் சந்ததியினரைப் பற்றியும் பேசவேண்டிதில்லை.

யாழ்ப்பாணத்துச் சைவன் ஒவ்வொருவனும் சிவத்துக்கு அடுத்தபடியாகவும் நாயன்மாருக்கு அடுத்தபடியாகவும் வைத்துப் போற்றவேண்டிய பெயர் நமது ஆறுமுக நாவலரவர்களுடைய பெயரேயன்றோ? சைவ உலகம்கொஞ்சம் கொஞ்சமாக இத்திருப்பெயரை மறந்து வருவதைக் கண்ட மன அலைச்சலில் பிறந்ததுதான் • இந்த மொழிபெயர்ப்பு.

சைவசமயிகள் என்று சொல்லிக் கொள்ளும் பெற்றோர் ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளுக்கு இச்சிறு நூலைப் பெற்றுக் கொடுத்துப் படிக்கச் செய்ய வேண்டுமென்பது என் பணிவான வேண்டுகோளாகும்.

# முகவுரை

ஆறுமுகநாவலர் என்ற பெயர் இன்று சைவஉலகெங்கும் போற்றிப் பேசப்படுகிறது. சைவசமய அனுட்டான முறைகளிலே மாறுபட்ட கருத்துள்ளவர்கள்தாமும் தத்தமது கொள்கைகளை நிலைநாட்டுவதாக எண்ணிக் கொண்டு பொருத்தமற்ற இடங்களிலும் நாவலரை மேற்கோள் காட்டுவதிலே பெருமையடைகின்றனர். ஆனால் அப்பெருமானுடைய மகோன்னதமான வாழ்க்கைபற்றி இவர்கள் எட்டுணையும் அறிந்திலர். ஆங்கிலமொழியறிவுள்ளவர்களுக்காக அவருடையஉயர்ந்த இலட்சிய வாழ்க்கை வரலாற்றைச் சின்னஞ்சிறிய இக்கைந்நூலில் வடித்துத் தந்திருக்கிறேன். மிக்க அடக்கத்துடனேயே நான் மேற்கொண்டுள்ள முயற்சி இது. நாவலருடைய வாழ்க்கைச் சரித்திரம்பற்றி வெளிவந்திருக்கும் நூல்களெல்லாம் சாதாரணமான வாசகர்களுக்கு மிகப்பெரிய நூல்களாயிருப்பதால் எனது மருகர் பண்டிதர் சம்பந்தன் இச்சிறு நூலுக்குத் தமிழ்வடிவம் ஒன்றை எழுதிவெளியிட எண்ணியிருக்கிறார்.

நாவலர் அவர்கள் தாமே எழுதிய விஷயங்களையும் நல்லூரைச் சேர்ந்தவரும் அவர்களுடைய பெறாமகனுமான அமரர் த. கைலாசபிள்ளை எழுதிய நாவலர் சரித்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டது இக்கைநூல். இப்பணியில் ஈடுபடும் தகுதி எனக்கில்லையென்பதை நான்அறிவேன். எனினும் அற்பசொற்பமாகவோ அங்கொன்றும் இங்கொன்றுமாகவோ நாவலர்பற்றி எழுதப்படும் இச்சிறு நூலுக்கும் ஒரு பயன் கிடைக்கும் என்றே நம்புகிறேன். அப்பெருமானாரது பெருமைக்கு ஏற்ற முறையிலமைந்த வாழ்க்கைச்சரிதம் ஒன்றை எழுதும் முயற்சியில் ஈடுபடும் ஆற்றலுள்ள வரலாற்றாசிரியனொருவனுக்கு இக்கைந்நூல் ஒரு தூண்டுகோலாக அமையக்கூடும் என்பது எனது நம்பிக்கை.

சு. சிவபாதசுந்தரம்
கந்தவனம் ஜூலை, 19, 1950

# வெளியீட்டாசிரியர் உரை

க. சொக்கலிங்கம் எம். ஏ.

சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதும் அவர் அருளிச் செய்தனவே வேத சிவாகமங்கள் என்பதும் அவர்தம் அருள் வழிப்பட்ட மெய்யடியார்கள் அருளியவையே திருமுறைகளும் மெய்கண்ட சாத்திரங்களும் என்பதும் ஐயந்திரிபுகளுக்கு இடமற்ற உண்மைகளாய்ச் சைவசமயிகளால் ஏற்றுக் கொள்ளப்படுவதோடு முத்தியின்பம் பெறும் பொருட்டுச் சிவபெருமானை மனமொழி மெய்களால் வழிபடுவதும் மேற்குறித்த சைவசமய முதனூல்களைப் போற்றி அவற்றின் வழி ஒழுகுவதும் அவர்களின் இன்றியமையாக் கடனுமாகும் என்று சைவ நெறிக் காவலரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தமது தருமநெறிப் பட்ட வாழ்வினாலும் வாக்கினாலும் தொண்டினாலும் வழிகாட்டினார்; சென்ற நூற்றாண்டிலே சைவசமய கலாசாரம் என்ற ஆலமரத்தை மேற்றிசைச் சமய கலாசாரம் என்ற சூறாவளியானது சுழன்றடித்து வேரோடு சாய்க்க முற்பட்டபோது அந்நிலை ஏற்படாது தாமே தனி நின்று காத்தார்; சைவர் என்ற பெயரோடு சைவத்திற்கு மாறான சூழலில் வாழ்வதும் சைவசமய அடிப்படை உண்மைகளை உணராத அறியாமையில் மூழ்கியிருப்பதும் அதன் அழிவுக்கு வித்தாய் அமைந்து விடும் எனக்கருதி, சைவப் பிள்ளைகள் சைவ கலாசாரச் சூழலிலே சமயத்தையும் தமிழையும் நன்கு கற்கவும் உலகியல் நன்மைகளுக்காய் ஆங்கிலம் கற்கவும் பின்னைய ஒன்றிற்காகவே பிறசமயப் பாடசாலைகளுக்கு அவர்கள் செல்வதைத் தடுக்கவும் முற்பட்டுத் தாமே பாடசாலைகளை நிறுவினார்; பிறரைத் தூண்டி நிறுவுவித்தார்; சைவசமய நூல்களையும் தமிழ் நூல்களையும் எழுதி வெளியிட்டார்; பல திறத்தனவான செயல்களிலும் தொண்டுகளிலும் தமது வாழ்நாளின் பெரும்பகுதியைச் செலவழித்தாலும் நேரத்தின் ஒரு பகுதியைக் கற்பித்தலுக்கும் ஒதுக்கி ஆளுமை நிறைந்த நல்லாசிரியத் தகைமையாற் சிறந்ததொரு மாணாக்க பரம்பரையை உருவாக்கினார். இவ்வகையில் அவர் நமது தேசிய சமய கலாசாரக் கல்விப் பாரம்பரியத்தின் முன்னோடியுமானார் என்று கொள்வதும் பொருந்துவதே.

ஈடு காணமுடியாததும் மகத்தானதுமான நாவலரின் வாழ்க்கை வரலாற்றினை அவரின் தமையனார் புதல்வரான ஸ்ரீமத் த. கைலாசபிள்ளை, வே. கனகரத்தின உபாத்தியாயர், சேற்றூர் அருணாசலக் கவிராயர் (செய்யுள்வடிவில்), மாயாண்டி பாரதி, யோகி சுத்தானந்த பாரதி (நாடகவடிவில்), தி. ச. வரதராசன் (வரதர்), சொக்கன், பண்டிதை பொன். பாக்கியம் முதலியோர் தமிழிலும் சைவப்பெரியார்

சு சிவபாதசுந்தரனார், வ. முத்துக்குமாரசுவாமி ஆகியோர் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளனர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, சி. சீவரத்தினம், கலாநிதி ச. தனஞ்சயராசசிங்கம் முதலியோர் ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளனர்.

சு. சிவபாதசுந்தரனார் அவர்களுடைய 'ARUMUKHA NAVALAR' என்ற நூல் மூர்த்தியாற் சிறியதாயினும் கீர்த்தியால் மாணப் பெரியதாகும். சைவப்பெரியார் கல்வியிலும் சைவசமயாசாரங்களிலும் தலைசிறந்து விளங்கிய குடும்பம் ஒன்றின் கான்முளையாய்த் தோன்றியவர்; தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் துறைபோன அறிவாளர்; கணிதம், ஆங்கிலம், அளவையியல், உளவியல், கல்வியியல் என்ற மேற்றிசைக் கல்விப்புலங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து இந்நூற்றாண்டுத் தொடக்கத்திலேயே அளவையியல், உளவியல் நூல்களைத் தமிழிலே ஆக்கி அளித்தவர்; வேதசிவாகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்கள் யாவற்றையும் கற்றுணர்ந்து உணர்ந்தாங்குச் சாதனையிலும் போதனையிலும் கடைப்பிடித்த சான்றோர்; சைவசித்தாந்த தத்துவங்களை மாணாக்கர் தொடக்கம் பெரியோர் வரை அறிந்து தெளிவடையப் படிமுறைக் கிரமமாகத் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்களை எழுதிய நுண்மாண் நுழைபுலத்தினர்; இவை யாவிலும் மேலாக நாவலரின் தேசிய சமய, கலாசார பாரம்பரியத்தினை இம்மண்ணிலே நிலைபெறுத்திய மேலோர் வரிசையிலே முதலிடம் வகிப்பவர். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நாவலரின் மாணவபரம்பரை இடையறவுபடாது கட்டிக் காத்து வந்தது போலச் சைவப்பெரியார் ஆசிரியர், அதிபர் பரம்பரை ஒன்றினை வளர்த்தெடுத்தார் நாவலர் தமிழிலே வசனநடை கைவந்த வல்லாளர். சைவப்பெரியார் தமிழோடு ஆங்கிலத்திலும் அத்தகைய வல்லாண்மை பெற்றிருந்தமைக்கு 'ARUMUKHA NAVALAR' நூலும் ஒரு சான்றாகும்.

இன்று அப்பெரியாரின் ஆங்கில நூல் நாவலர் குருபூசை தினத்தன்று தமிழ் மொழிபெயர்ப்பு வடிவில் வெளியாவது சைவத்தமிழ் மக்களுக்கு வாய்த்த பெரும் பேறு என்பதற்கு ஐயமில்லை. மூல நூலாசிரியனது கருத்தோட்டத்தோடு இணைந்து விடுவதால் மட்டும் ஒரு மொழிபெயர்ப்பு நூல் மேன்மை பெற்று விடுவதில்லை. மூல நூலாசிரியனின் உள்ளமும் உணர்வுகளும் அவன் கருத்துக்களோடு இரண்டறக் கலந்து அத்துவிதமாகும் நிலையிலேதான், இது மூலமா மொழிபெயர்ப்பா என்ற வியப்பார்ந்த ஐயத்தை எழுப்பும் நிலையிலேதான் மொழிபெயர்ப்பு நூல் மகோன்னதத்தை அடைகின்றது. இதற்கு மூலநூலாசிரியனை உள்ளும் புறமும் உணர்ந்திடத்தக்க உள்ளுணர்வும்

அவன் சொல்லும் பொருளிலே பத்தி கலந்த நம்பிக்கையும் தெளிவும் முழுமையான விளக்கமும் மூலமொழி, மொழிபெயர்ப்பு மொழியாகிய இரண்டிலும் இணையான அறிவாற்றலும் மொழி பெயர்ப்பாளனுக்கு இன்றியமையாத் தகுதிகளாய் வேண்டப்படுகின்றன.

இத்தகுதிகள் யாவும் 'ARUMUKHA NAVALAR' நூலைத் தமிழில் மொழிபெயர்த்த அமரர் வை. ஏரம்பமூர்த்தி (ஈழத்துறைவன்) அவர்களுக்குக் குறைவற அமைந்து கிடந்தன என்பதற்கு இன்று வெளியாகும் இத்தமிழ் 'ஆறுமுகநாவலர்' நூல் சான்று பகரும் என உறுதியாக நம்புகின்றேன். அமரர் வை. ஏரம்பமூர்த்தி கலைமாணிப் பட்டதாரி; யாழ். இந்துக் கல்லூரியின் மூத்த ஆசிரிய பரம்பரையினர்; சைவ ஆசாரசீலர், கல்லூரியின் இந்துஇளைஞர் மன்றப் புரவலராய் விளங்கிச் சைவ கலாசார பாரம்பரியத்தை மாணவரிடையே கட்டியெழுப்பியவர்; இந்துக்கல்லூரியின் ஞானவைரவர் ஆலயத்தின் இன்றைய வடிவிற்கும் வனப்பிற்கும் தெய்விகத்திற்கும் வித்திட்ட முதல்வர்களுள்ளே குறிப்பிடத்தக்கவர். கணிதம், தமிழ், ஆங்கிலம், சமயம் ஆகிய பாடங்களைத் தங்காலத்திலே திறம்படக் கற்பித்த நல்லாசிரியரான இவர், ஆங்கிலத்திலும் ஆற்றல் பெற்றிருந்ததோடு ஓவியம், நாடகம், நிழற்படக்கலை என்பவற்றிலும் திறமை படைத்திருந்தார். எனவே மூலநூலாசிரியரின் கருத்துக்கள் உணர்வோட்டங்களை நன்கு உள்வாங்கி அவருடைய நூலுக்கு எவ்வித குறைவும் ஏற்படாதவாறு மிகச்சிறப்பாக இம்மொழி பெயர்ப்பினை அவராலே செய்ய முடிந்ததில் வியப்பில்லை. எனினும் அவரின் ஆன்மார்த்தப் பணியானது அவர் காலத்திலேயே நூல்வடிவில் வெளிவராது போனது மிகக் கவலையளிக்கும் ஒன்றே. நாவலர் குருபூசையான இப்புனித நாளிலே (15-12-92, கார்த்திகை மகம்) அவரது அபிலாட்சையை நிறைவேற்றும் வகையிலே நூலை வெளியிட்டு வைப்பதன்மூலம் வெளியீட்டாளர்கள் அவரின் புனித ஆன்மாவிற்குத் தமது நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த திருவருள் குறித்து அமைதியும் ஆனந்தமும் அடைகிறார்கள்.

வெளியீட்டாளர்களுக்கு வேறொரு வகையிலும் இந்நாள் மிகப் புனிதமானதாகவும் நினைவில் வணக்கத்தோடு நிறுத்துவதற்குரியதாகவும் அமைந்தமை ஓர் தற்செயல் நிகழ்ச்சியேயாயினும் அது அவர்களைப் பொறுத்தவரை மகத்தானதே.

இப்புவியில் உற்றோர்க்கும் மற்றோர்க்கும்
இதமான பலசேவை புரியும் செம்மல்
அப்பு வென எவ்வெவரும் அன்பினுடன்
அழைக்குமருட் குணம் படைத்தோன்
செப்பரிய பத்தியுளோன் சீராளன்
காராளன் சிறப்பு மிக்கோன்
ஒப்பரிய செந்தமிழும் ஆங்கிலமும்
உறக்கற்றோன் ஒழுக்கம் மிக்கோன்

ஆகிய அவர்களின் பிதாமகரும் அஞ்சலகங்களின் மேற்பார்வை அதிகாரியாய்ச் சேவைபுரிந்தாலும் தமது 'வினையாடல்' காரணமாய் அனைத்திலங்கை அஞ்சலகங்களின் மேலதிகாரியாய் மிகுந்த மதிப்போடு கருதப்பட்டு மேலிடத்தாரின் கௌரவ ஆலோசகராய் விளங்கி யாவரும் வள்ளன்மை, சான்றாண்மை, ஒப்புரவு முதலாம் அரிய பண்புகளுக்கு உறையுளானவருமான அமரர் **கந்தப்பர் சண்முகம்** அவர்களின் நூற்றாண்டு நிறைவும் இத்தினத்தோடு வந்தமைவதால் அன்னவரின் குடும்பத்தினர் தங்கள் நினைவு கூர்தலிலே நிறைவு காண்பதில் அர்த்தமும் நியாயமும் உள்ளன.

இந்நூல் வெளியாவதிலே பேரார்வம் கொண்டிருந்த அமரர் ந. சபாரத்தினம் அவர்களை நினைவு கூர்வதோடு, வசதிகள் அதிகமில்லாத சிறியதோர் அச்சகத்திலும் ஓரளவு சிறந்த முறையில் நூலை அச்சிடலாம் என்று வழிகாட்டி நூலமைப்பினைச் செம்மை செய்து தந்த நண்பர் மயிலங்கூடலூரர் பி. நடராசனுக்குத் திருவள்ளுவர் அச்சகச் சார்பிலும் வெளியீட்டாளர் சார்பிலும் நன்றி கூறுகின்றேன்.

எவ்வளவோ கவனமெடுத்துச் சரவை பார்த்தும் சில அச்சுப்பிழைகள் நேர்ந்துவிட்டன. இந்நூலைப்படிப்போர் பின்வருமாறு அவற்றைத் திருத்திக் கொள்ளும்படி தயவாக வேண்டுகின்றேன்.

| பக்கம். | பிழை | திருத்தம் |
|---|---|---|
| 5 | தமயன்மார் | தமையன்மார் |
| 8 | பரணாத்தலையர் | பாணாத்தலையர் |
| 12 | ஆச்சரிசமா | ஆச்சரியமா |
| 13 | அவைகளைத் | அவர்களைத் |
| 14 | புலையூரிலே | புலையரிலே |
| 14 | தன்சமயத்தை | தம்சமயத்தை |
| 14 | சைவனும் | சைவரும் |
| 22 | அவ்வேதியர்கள் | அவ்வேதியர்களை |
| 26 | வாலறிவான் | வாலறிவன் |

" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "



அமரர்

## வைத்திலிங்கம் ஏரம்பமூர்த்தி பீ. ஏ.

ஆரம்பஞ் செய்யும் கருமங்க ளத்தனையும்
சீரும் திறமும் திகழ்ந்திடவே - ஏரம்ப
மூர்த்தி துணைநின்று முத்த னடிசார்ந்தார்
ஆர்த்த புகழார் அவர்.



அமரர்

# கந்தப்பர் சண்முகம்

தோற்றம்
**4-12-1892**

மறைவு
**29-4-1956**

எண்ணிய காரியம் எண்ணிய வாறே இனிமையுடன்
நண்ண முடித்திடும் திண்மையன் நாட்டவர் நன்மதிப்பைத்
தண்ணளி யாலும் விருந்தோம்ப லாலும் தகுதியுறும்
வண்ணம தானதன் வாழ்க்கையி னாலும் மருவினனே.

—ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர்

# நூன்முகம்

ஒழுக்க சீலனான தலைவனொருவனில்லாமல் சைவப்பயிர் வாடிக்கிடந்தது. தகுந்த ஓர் ஆசானின்றித் தமிழன்னை தவித்துக் கொண்டிருந்தாள். தியாகச் செம்மலொருவனுக்காக யாழ்ப்பாண நாடே ஏங்கிநின்றது. இத்தகைய ஒரு சூழ்நிலையிலேதான் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் தோன்றினார்கள். இரண்டு நூற்றாண்டுகளாக நமது சைவசமயம் அந்நிய ஆதிக்கத்தினால் நசுக்கப்பட்டு வந்தது. தமிழிலக்கிய இலக்கணங்கள் ஓலைச் சுவடிகளுக்குள்ளே சிறை வைக்கப்பட்டிருந்தன; தலைவனொருவனின்றி யாழ்ப்பாணம் இருளில் மூழ்கிக்கிடந்தது. நாவலர் தோன்றினார், நிலைமையைக் கண்டார்; இவற்றுக்கெல்லாம் விடிவு தேடித்தந்தார்.

ஐரோப்பாவில் மதவெறியே நடைமுறை வழக்கமாயிருந்த ஒரு காலத்திலேயே போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினார்கள். இங்கிலாந்திலே இம்மதவெறியைத் தூண்டிவிட்ட மேரி என்ற மகாராணியை உதிர(க்காளி) மேரி என்றே வழங்கினார்கள். அங்கே ஒரு நூற்றாண்டு காலமாக இரத்தக்களரி கோர தாண்டவமாடியது. புரட்டஸ்தாந்த மதத்தைச் சேர்ந்தவர்களில் ஆயிரக்கணக்கானோர் பிரான்சு தேசத்தில் ஒரே நாளில் படுகொலை செய்யப்பட்டனர். இச்சம்பவம் நடைபெற்ற தினத்தைப் புனித பார்த்தலோமியோ தினம் என வழங்குகிறார்கள். நம் யாழ்ப்பாண நாட்டிலிருந்தோரனைவரும் சைவசமயிகளாயிருத்தலைக் கண்ட போர்த்துக்கேயர் மனம் பொறாதவராய்த் தம் நாட்டிலே நடைமுறை வழக்கிலிருந்த மத வெறிக் கொள்கையை இங்கேயும் கடைப்பிடிக்கத் தொடங்கினர்.

அந்நியருடைய மதவெறிக்காற்றாத யாழ்ப்பாண மக்களிற் பலர் இந்தியாவுக்கு ஓடித்தப்பி அங்கே வேதாரண்யம், சிதம்பரம் முதலான இடங்களிற் குடியேறினார்கள். இங்ஙனம் ஓடித்தப்பியவர்

களிலே ஞானப்பிரகாச முனிவரும் ஒருவராவர். அன்னாரது சிறந்த குடும்பத்திலே தோன்றியவரே நமது நாவலர் பெருமான். மற்றும் இங்கே தங்கியிருந்தவர்களிற் பலர் வெளிப்படைக்குக் கத்தோலிக்கர் போல வாழ்ந்துகொண்டு அகத்தே சைவராயிருந்தார்கள். ஏனையவர்கள் உண்மைக் கத்தோலிக்கராகவே மாறினார்கள்.

இரண்டுமற்ற வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தவர்கள் தமது சமய ஒழுக்கங்களை முறையாகக் கடைப்பிடிக்க முடியாமல் இடர்ப்பட்டனர். கோவில் வழிபாடு, விரத உத்தியானங்கள், தீக்ஷை முதலான இன்றியமையாத சமயானுஷ்டானங்களில் ஈடுபட முடியாத காரணத்தினால் அவர்கள் வெளிப்பார்வைக்கு எங்ஙனம் கிறிஸ்தவர்களாயிருந்தனரோ அவ்வாறே அகத்தேயும் பெயரளவிலேயே சைவர்களாயிருந்தனர்.

போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்துக்குப் பிரியாவிடை சொல்லிவிட்டுப்போக வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டதும் மேற்கூறியவாறு கிறிஸ்தவத் தோற்றம் காட்டி வாழ்ந்தவர்களெல்லாம் தமது ரோமன் கத்தோலிக்கப் போர்வையை உதறிவிட்டுச் சைவசமயத்தை வெளிப்படையாகவே அனுஷ்டிக்கத் தொடங்கினார்கள். ஆயினும் நாம் மேலே கூறியாங்கு சைவநெறிமுறைகளில் அப்பொழுது எஞ்சியிருந்தது மிகமிகச் சொற்பமேயாகும். போர்த்துக்கேயருக்குப் பின்வந்த ஒல்லாந்தரும் அவர்களைப் போலவே தமது மதக்கோட்பாடுகளை நம் மக்கள்மீது திணிப்பதில் ஆர்வமுள்ளவர்களாகவே இருந்தனரேனும் போர்த்துக்கேயரைப்போல இவர்கள் வெளிப்படையாகக் கொடுமை செய்யவில்லை. மறைமுகமான கபட மார்க்கங்களை இவர்கள் கையாண்டு வந்தனர். யாழ்ப்பாணத்திலே புரட்டஸ்தாந்தமதம் தோன்றக் காரணமாயிருந்தவர்களுமிவர்களேயாம்.

ஒல்லாந்தர் காலத்துக்குப் பின் பிரித்தானிய ஆட்சி ஆரம்பித்த போது யாழ்ப்பாணத்துச் சைவசமயிகளுக்கு நிம்மதி கிடைத்ததென்னலாம். தங்கள் சமய ஒழுக்கங்களைக் கடைப்பிடித் தொழுகத் தமக்குச் சுதந்திரம் கிடைத்ததென்று உணரக்கூடியதாயிருந்தது. வேதாரண்யத்திலிருந்து சைவக்குருமார் இங்கே வந்து சிற்சில இடங்களிலே

சைவசமய புனருத்தாரணம் செய்தனர். தங்களுடைய மதத்தைச் சார்ந்தவர்களுடைய நலன் கருதிப் பாதிரிமார் இங்கே வந்தார்கள் என்று கூறமுடியாது. இங்குள்ள சைவர்களையும் தங்கள்பால் திருப்பவேண்டு மென்ற திட்டமிட்ட ஒரு நோக்கத்தோடு நமது சைவசமயத்துக்கு உலை வைக்கவே இவர்கள் இங்கு வந்தனர். தனித்தனிக் குருமாராக அன்றி இவர்கள் மிஷனரிக் கூட்டங்களாக வந்தார்கள். இலங்கையின் வேறு எந்தப்பகுதியும் யாழ்ப்பாணத்தைப் போல மிஷனரித் தாக்கத்துக்குள்ளாகவில்லை. இரண்டு நூற்றாண்டுக் காலமாக அந்நிய ஆதிக்கத்துட்பட்டு நசிந்து போயிருந்த யாழ்ப்பாணத்துச் சைவமக்கள் பாவம் தம் முதுகெலும்பையே இழந்துவிட்டனர். உணவு, உடை, பணம், உத்தியோகம், ஆங்கிலக்கல்வி என்பவற்றைக் கொடுத்து நமது மக்களையே இந்த மிஷனரிமார் அப்போஸ்தலர்களாக்கி வைத்தனர். இத்தகைய சுகங்களைக்கண்டுமயங்கிய நம்மவர் பலர் நமது சமயத்தைக் கைவிட்டுக் கிறிஸ்தவமதத்தைத்தழுவினர். இவருள்ளும் பலரை அவர்கள் பாதிரிமாராக்கி உற்றாருறவினரைக்கிறிஸ்தவராக்கப்பயன்படுத்தினார்கள். போர்த்துக்கேய ஒல்லாந்த காலங்களிலே ஆதிக்கவெறிக்கஞ்சிக் கிறித்தவரானோரிலும் பார்க்க இந்தக் கிறிஸ்தவர்கள் மிகவும் விசுவாசிகளாயிருந்தனர். ''அறிவு குறைந்த, மூடநம்பிக்கை மிகுந்த, காட்டுமிராண்டிகளான ஒரு மக்கட் கூட்டத்தின் சமயம்தான் சைவசமயம். கிறிஸ்தமதமோ உலகிலே அறிவான்மிக்க சமுதாயம் கைக்கொள்ளும் மதமாகும்'' என்று மிஷனரிமார் கூறிவந்தனர். எனினும் பிறவியிலேயே சைவராசய்ப்பிறந்த சிலர் தமது சமயக்கோட்பாடுகளை முற்றுகக் கைவிடாமலே வாழ்ந்து வந்தனர். தமது சமயத்தில் ஆழ்ந்தநம்பிக்கை கொண்டிருந்த ஏனைய சைவமக்கள் இந்த மிஷனரித் தாக்கத்ததை எதிர்க்க எத்தகைய முயற்சியும் மேற்கொள்ள முடியாத அளவுக்கு அசத்தர்களாயிருந்தனர். இவ்வாறு நம் சைவசமயம் தாழ்வுற்று வலிமைகுன்றித் தத்தளித்துக்கொண்டிருந்தது.

இருள்சூழ்ந்த இக்காலத்திலேதான் நமது அவதார புருஷர் தோன்றினார், சைவசமயத்துக்குப் புத்துணர்வூட்டினார். அடங்கிக் கிடந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்தார், தற்காப்புக்கேயன்றிப் புறச்சமயவாதிகளை எதிர்க்கவும் வேண்டிய சக்தியைத் திரட்டினார்.

இனித் தமிழ்மொழி அந்நிய ஆட்சியினாலேதான் பாதிக்கப்பட்டதென்று கூறிவிடமுடியாது. சிறந்த தமிழ்க்கல்விமான்கள் பலர் அக்காலத்திலிருந்தனர். ஆயினும் தமிழ்மொழியின் அபிவிருத்திக்கு இரண்டு வகையான வசதிக் குறைவுகள் இருந்தன. தமிழைப் பாதுகாப்பவர்கள் என்றிருந்த ஒரு சாரசாரிடையே விரும்பத்தகாத பொறாமைக் குணம் ஒன்றிருந்தது. இதனை அவ்வளவு தூரம் பாரதூரமான ஒரு வசதிக்குறைவென்று கூறமுடியாது. தாம் கண்டறிந்த உண்மைகளை மற்றவர்களுக்கும் சொல்வதற்கு இவ்வறிஞர்கள் முன்வரவில்லை. பண்டித வர்க்கத்தினருக்கு ஏற்ற விஷயங்களையே அவர்கள் கற்பித்தார்கள். எனவே தம் முயற்சியின் பயனாகக் கண்டறிந்தவையெல்லாம் அவர்களுடனேயே மறைந்தும் போயின. மற்றும் தமிழ் நூல்கள் எவையுமே அச்சில் இல்லாதது தமிழ் மாணவனுக்குப் பெரிதும் வசதிக் குறைவாகவே இருந்தது. தான் படிக்க விரும்பிய ஒவ்வொரு நூலையும் அவன் பனையோலைச் சுவடிகளிலே எழுதியே படிக்கவேண்டியிருந்தது. இந்நிலையைக் கண்ட நாவலர் தமக்கெனச் சொந்தமான அச்சகமொன்றை நிறுவித் தமிழ்நூல்களில் மிகமுக்கிய மானவற்றை அச்சிட்டு உதவினார். தாமே ஓர் ஆசிரியராகி எழுத்தாலும் பேச்சாலும் நாடெங்கும் அறிவுச்சுடர் கொளுத்திக் கல்வித் துறையில் இருந்துவந்த ஏகபோக உரிமையை உடைத்தெறிந்தார். சைவஉலகிலேமுதலாவது பிரசாரகராகக் கருதப்பட்டவர். பிரசங்கம் ★ என்ற வார்த்தையைத் தமிழுலகுக்கு அறிமுகம் செய்துவைத்தவருமிவரேயாவர். □

★ சில ஆண்டுகளுக்கு முன்னே பிரசங்கம் என்ற வார்த்தைக்குப் பதிலாகச் சொற்பொழிவு என்று வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன்பொருள் சொன்மழை என்பதாகும். எனினும் இவ்வழக்குச் சிறிது காலத்தில் அற்றுப்போயிற்று.

# இயல் 1

## இளமைப் பருவம்

நல்லூரிலே கார்காத்த வேளாளர் குலத்திலே தமிழ்ப்புலமை மிக்கதொரு குடும்பத்தில் 1822ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22ஆம் திகதி நாவலர் பிறந்தார். இக்குடும்பத்தில் அறிவான்மிக்க பெரியாராய் விளங்கியவர் ஞானப்பிரகாச முனிவர் என்பவர். இவர் ஆகம சாத்திர விற்பன்னர். வடமொழியில் எட்டு நூல்களை எழுதியுள்ளார். சிவஞானசித்தியாருக்குத் தமிழிலே பேருரையொன்றும் எழுதியுள்ளார். மற்றும் நாவலருடைய பூட்டனாராகிய இலங்கைகாவல முதலியார், பாட்டனாராகிய பரமானந்தர், தகப்பனாராகிய கந்தர் ஆகிய இவர்களெல்லாம் அரசாங்க உத்தியோகங்களை வகித்தவர்கள். அத்துடன் தமிழிலும் புலமை மிக்கவர்களாக விளங்கினர். நாவலருடைய தந்தையாராகிய கந்தர் நாடகாசிரியராகவும் வைத்தியராகவும் தமிழ் வைத்திய நூல்கள் பலவற்றினாசிரியராகவும் விளங்கினார். நாவலருக்குத் தமயன்மார் நால்வரிருந்தனர். இவர்கள் எல்லோருமே அரசாங்க உத்தியோகம் வகித்தவர்களாவர். நாவலருடன் கூடப்பிறந்த சகோதரிமார் மூவரிருந்தனர். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையின் தாயார் இவர்களுள் ஒருவராவர்.

நாவலர் தமது ஆரம்பக்கல்வியைச் சுப்பிரமணியபிள்ளையென்பவர் நடத்திவந்த ஒரு சிறிய பாடசாலையிலேதான் கற்றார். அவரிடம் அபரிமிதமான விவேகம் இருந்ததென்பது அவருடைய ஒன்பதாம் வயது வரையில் அவர் தம் ஆசிரியர்க்கே தெரியாதிருந்தது. ஒன்பதாம் வயதிலே நாவலருடைய தந்தையார் காலமானபோது அவரால் எழுதப்பட்ட தமிழ் நாடகமொன்று முற்றுப்பெறாத நிலையிலிருந்தது. இதனை நாவலர் அவ்விளமைப் பருவத்திலேயே பூர்த்திபண்ணினார். இந்த அற்புத ஆற்றலைக் கண்ட நாவலருடைய அண்ணன்மார் அதிசயித்து அவரைச் சரவணமுத்துப் புலவரிடத்திலே உயர்கல்வி பயிலச் செய்தனர். அதன் பிறகு அவருடைய குருவான சேனாதிராய முதலியாரிடம் நாவலர் கல்வி பயின்றார். ஏனைய மாணவர்க்குப் பாடம் சொல்வது போலவே நாவலருக்கும் பாடங்கள் போதிக்கப்பட்டு வந்தன. ஆனால் அவருடைய கல்விப் பசிக்கு இப்போதனைகள் சிறிதளவேனும் போதியதாயிருக்கவில்லையென்பதை ஆசிரியர்கள் வெகுவிரைவில் உணர்ந்துகொண்டார்கள். அதனால் ஏனையோர்க்கு ஒரு மாதந்

துக்குரிய பாடங்களை நாவலருக்கு ஒரு நாட்பாடம் என்ற அளவிலே தினமும் அளித்து வந்தார்கள். வைகறையில் நான்கு மணிக்கே நாவலர் துயிலெழுந்துவிடுவார். காலைக் கடன்களையும் சமயவனுட்டானங்களையும் முடித்துக்கொண்டு அவர் படிக்கத் தொடங்கி விடுவார். உணவு நேரம் தவிர்ந்த ஏனைய பொழுதெல்லாம் நாவலருக்குப் படிப்பிலேயே கழியும். நாவலருடைய உடம்பு மிகவும் நொய்த உடம்பு. விளையாட்டுக்களில் அவர் ஈடுபட்டதே இல்லை. அவருடைய தலை மட்டும் அளவுக்கதிகமாகப் பருத்திருந்தது. ✱ தமது பன்னிரண்டாம் வயதிலேயே அவர் தமிழ்க்கல்வியை முடித்துக் கொண்டார். அதன் பின்பு ஆங்கிலக் கல்விக்காக யாழ்ப்பாணத்திலிருந்த மெதடிஸ்த ஆங்கில பாடசாலைக்கு அவரை அனுப்பினார்கள். ஆங்கிலமொழியறிவையும் அவர் மிக விரைவிலேயே பெற்றுக் கொண்டார். அதனால் அப் பாடசாலையிலே முதல்வராயிருந்த சங்கைக்குரிய பீட்டர் பர்சிவல் என்பவர் அவரைக் கீழ்வகுப்புகளில் ஆங்கிலமும் மேல் வகுப்புகளில் தமிழும் கற்பிக்குமாறு கேட்டுக்கொண்டார். எஞ்சிய நேரங்களில் நாவலர் வடமொழியையும் சமயநூல்களையும்தாமே கற்றுவரலாயினர்.

இங்ஙனமாக அவருடைய பத்தொன்பதாம் வயதிலே விவிலிய நூலை மொழிபெயர்க்கும் பணியையும் நாவலரிடம்ஒப்படைத்தார்கள். தமது சமய அநுட்டானங்களைச் செய்வதிலும் சைவசமய பிரசார வேலைகளிலும் ஏனைய மதங்களைக் கண்டித்துப் பேசுவதிலும் தமக்குச் சுதந்திரம் அளிக்கப்படவேண்டுமென்ற நிபந்தனையுடன் அந்த மொழிபெயர்ப்பு வேலையை நாவலர் ஒப்புக்கொண்டார். நாவலரையன்றி வேறெவரும் இப்பணியைத் திறம்படச் செய்யமாட்டாகள் என்பதை அறிந்த சங்கைக்குரிய அப்பெரியவரும் நாவலருடைய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார். அத்துடன் தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தாமும் கற்பதற்கு நாவலரையே ஆசானாக்கிக்கொண்டார். நாவலரிடம் கல்வி பயின்று பல நன்மைகளைப் பெற்றுக்கொண்ட பாதிரியார் நாவலரைத் தமது குரு என்றே குறிப்பிட்டுவந்தார்.

பைபிள் மொழி பெயர்ப்பிலே முதனூலின் உண்மைச் சொரூபத்தையும் அதன் தத்துவக் கோட்பாடுகளையும் மொழிபெயர்ப்பிலும் பிரதிபலிக்கச் செய்யவேண்டுமென்று நாவலர் அந்நூலுக்குரிய வியாக்கியானங்களையும் அதனோடு தொடர்புடைய ஏனைய நூல்களையும் படிக்கவேண்டியிருந்தது. இம்மொழிபெயர்ப்பு வேலை முடிந்ததும்

பர்சிவல் பாதிரியார் நாவலரை அழைத்துக்கொண்டு சென்னைக்குச் சென்றார். அங்கேயும் பண்டிதர்கள் குழுவொன்று பைபிளை மொழி பெயர்த்துவைத்திருந்தது. எனவே இம் மொழிபெர்ப்புக்கள் இரண் டும் ஒப்புநோக்கப்பட்டன. அப்பொழுது பல இடங்களிலே கருத்து வேறுபாடுகள் காணப்பட்டன. எனவே இவ்விரண்டு மொழிபெயர்ப் புக்களுள்ளும் சிறந்தது எது என்பதைத் தேர்ந்தெடுக்குமாறு சென் னையிலிருந்த அறிஞர் ஒருவரிடம் அவை ஒப்படைக்கப்பட்டன. யாழ்ப்பாணத்து மொழிபெயர்ப்பே சிறந்ததெனை அவ்வறிஞர் தேர்ந் தெடுத்ததோடமையாது மொழிபெயர்த்தவருடைய புலமையையும் சிலாகித்துப் பாராட்டினார். மிஷனும் நாவலருடைய மொழிபெயர்ப் பையே ஏற்றுப் பிரசுரம் செய்தது.

இந்த மொழிபெயர்ப்பு வேலையில் ஈடுபட்டதனால் நாவலர் கிறிஸ் தவ மதக் கோட்பாடுகளையும் நன்கு தெரிந்துகொண்டார், பின்னால் நமது சமயப் பிரசாரகராக அவர் ஆற்றிய பணிக்கு இது பெரிதும் பயனளித்தது.

மொழிபெயர்ப்பு வேலையிலீடுபட்டிருந்தபோது பாதிரிமார் தமது சமயத்தைப் பரப்புவதற்குக் கையாளும் முறைகளையெல்லாம் நன்கு தெரிந்துவைத்துக்கொண்டார். சைவசமயிகள் தமது சமய அநுட் டானங்களில் கொண்டிருந்த அசிரத்தை காரணமாகவும் நமது சமயம் நலிவடைந்து வந்துள்ளதென்பதை நாவலர் அறிந்துகொண்டார். எனவே தமிழிலிருந்த சைவசித்தாந்த நூல்களையும் தேவார திரு வாசகங்களையும் அவர் விரைவிலே கற்றுப் பாண்டித்தியமடைந்தார். அத்துடன் வடமொழி இலக்கிய இலக்கணங்களையும் கற்றுக்கொண் டார். பின்னர் சைவசமயத்திலே வேத சிரசுகள் எனப் போற்றப்பட்ட சைவாகமங்களையும் கற்றுணர்ந்தார். அக்காலத்திலே கிடைக்கக் கூடியனவாயிருந்த ஒரு சில ஆகமங்களை மாத்திரமே கற்றுக்கொண்டு திருப்தியடைய வேண்டியிருந்தது. உபநிடதங்கள், புராணங்கள் என் பவற்றையும் கற்றுத்தேர்ந்தார். இன்னும் உபாகமங்கள், பத்ததிகளைக் கூட அவர் படிக்கத் தவறவில்லை. அருணசல கவிராயர் எழுதிய ''நாவலர் வாழ்க்கை'' என்ற நூலின் முன்னுரையிலே „நாவலரால் எழுதப்பட்ட நூல்களிலே மேற்கோளாகக் காட்டப்பட்டிருக்கும் நூல்கள் எண்பதுக்கும் மேலிருக்கும் என்று பண்டிதர் சி. கணபதிப் பிள்ளை அட்டவணையொன்றைத் தந்துள்ளார்.

இவ்வாறாக நாவலர் தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் சைவ சமயத்தின் கிரியாகாண்டம், ஞானகாண்டம் என்பவற்றிலும் சமஸ்கிருதத்திலும் பெரும் பாண்டித்தியம் பெற்றதோடு ஆங்கிலத்திலும் போதிய ஆற்றல் பெற்றிருந்தார், நுண்மாணுழைபுலமிக்க சிந்தனையாளர் அவர் கவித்துவமிக்கவர். சிறந்த எழுத்தாளர். கடல்மடை திறந்தாலொப்பச் சொற்பஞ்சமின்றி வாக்குமழை பொழியும் அற்புத ஆற்றல் பெற்றவர், காரணகாரியங்களை எடுத்து நிறுவி வாதிடுவதில் வல்லவர்.★★ இவற்றையெல்லாம் நோக்கும்போது தளர்வறியா ஊக்கமுள்ள ஓர் இயற்கை விவேகி என்றே நாவலரைக் கூறலாம். யாழ்ப்பாணத்திலும் தென்னிந்தியாவிலும் இவரைப்போலப் பலர் விவேகிகளாக இருந்திருக்கலாம். ஆனால் இவர்கள் ஆறுமுக நாவலர்களாகவில்லை. அறிவாற்றல்களோடுகூட நாவலருடைய உள்ளத்திலே இறையன்பும் சத்தியநெறியிலே பற்றுதலும் கூடவே வளர்ந்து வந்தன. அறிவு வளர்ச்சி, சாதனை இரண்டிலும் ஒரு நெருங்கிய தொடர்பை நாவலருடைய வாழ்க்கையிலே காணக்கூடியதாயிருந்தது. நன்மை தருவதும் நெறிமுறையின்பாற்பட்டதும் எனத் தெரிந்தது எதுவோ அதனை நாவலர் சாதனையிலும் செய்துவந்தார். கடவுள்மீது கொண்ட ஆராக் காதலால் அவருடைய ஆத்மசக்தி ஓங்கிவளர்ந்தது. சத்தியத்தின்மீது அவர் கொண்டிருந்த பற்று அதனைப் பரப்பவேண்டுமென்ற தணியாத ஆவலையும் அவர் உள்ளத்திலே தூண்டிவிட்டது, நாவலரை நாவலர் பெருமானாக்கிய பண்புகள் இவையேயாகும். □

★ குழந்தைப் பருவத்திலே நாவலருடைய உறவினர்கள் அவரைப் பரஞ்சோதித்தலையர் என்று செல்லமாக அழைப்பதுண்டு, கோவில்களிலே வடித்துவைக்கப்பட்ட நமது சமயகுரவர்களுடைய சிலைகளில் அந்நாயன்மாருடைய உண்மையான தோற்றத்தை நாம் காணமுடியாது. அங்ஙனமே அண்மைக் காலத்தில் வரையப்பட்ட நாவலர் படத்திலும் நாம் காண்பது அவருடைய உண்மையான தோற்றமன்று. அவருடைய சாயலை ஓரளவுக்கொத்திருந்த எனது நண்பருடைய படத்தைப் பார்த்து வரையப்பட்டதுவே இப்பொழுது நாம்காணும்படங்களாகும்.

★★ சட்டநிரூபண சபையிலே 19-10-1876 இல் சர். முத்துக்குமாரசாமி நிகழ்த்திய பேருரையொன்றிலே நாவலரைப்பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்; ''எனது மதிப்பிற்குரிய நண்பரும் மகாராணியின் நியாயவாதியுமான இந்த மாவீரனோடு இணையாக நின்று (சொற்) போராடவல்ல இத்தேசக் கல்விமான்களுள் இவரும் ஒருவராவர்''

# இயல் 2

## சமயப்பணிகள்

தமது நாட்டின் அவலநிலை பற்றிய சிந்தனைகளே நாவலருடைய உள்ளத்தில் நிரம்பியிருந்தன. அவருக்குத் திருமணம் செய்துவைத்து விட வேண்டுமென்று அவருடைய தமையன்மார் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் வியர்த்தமாயின. அவருடைய உள்ளத்தில் அப்படி ஒரு நினைவே இருந்ததில்லை. வாழ்நாள் முழுவதும் பிரமசாரியாகவே இருப்பதென்று அவர் தீர்மானித்திருந்தார்.

நாவலர் தமது இருபத்துமூன்றாம் வயதிலே பொதுப்பணிகளில் ஈடுபட ஆரம்பித்தார். தமிழிலே போதிய அறிவுபெற்ற இளைஞர்களை ஒன்றுசேர்த்து அவர்களுக்குக் காலையிலும் மாலையிலும் தமிழிலக்கியங்களையும் சைவசமய சாத்திரங்களையும் போதித்து வந்தார். இவ்விளைஞர்களுள் சதாசிவம்பிள்ளை, நடராச ஐயர், ஆறுமுகம்பிள்ளை என்பவர்களே மிகவும் விவேகிகளாக விளங்கினர். சதாசிவம்பிள்ளையோ தமது குருவின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தாமும் பிரமசரிய விரதத்தை மேற்கொண்டு நாவலருக்கொரு சேனாதிபதியாக விளங்கினார். சென்னையிலிருந்த நாவலரது பதிப்பகத்தின் பொறுப்பு முழுவதையும் ஈற்றில் இவரே ஏற்றுக்கொண்டார். தமது குருவினுடைய மறைவுக்குப்பின் பதிப்பகப் பொறுப்புடன் சிதம்பரம் நாவலர் பாடசாலைப் பொறுப்பையும் ஏற்றார். சமய நூற்கல்வியிலேயே சிறப்பாக ஈடுபாடு கொண்டிருந்த நடராஜ ஐயர், சைவசித்தாந்த போதனையிலீடுபட்டார். மற்றும் ஆறுமுகம்பிள்ளையும் பிரமசரிய வாழ்க்கையையே மேற்கொண்டு திருவண்ணாமலை ஆதீனத்தில் சேர்ந்து தம்பிரானாகிப் பெரிய புராணத்துக்கு விரிவுரையும் ஒன்றெழுதினார்.

இனி நாவலருடைய மாணவர் கூட்டத்திலே இரண்டாவது தொகுதியைச் சேர்ந்து விளங்கியவர்கள் அவருடைய மருகராகிய பொன்னம்பலபிள்ளை மற்றும் வைத்திலிங்கபிள்ளை, செந்திநாத ஐயர் என்பவர்களாவர். பொன்னம்பலபிள்ளையோ நாவலரைப் போலவே சிறந்த தமிழறிஞராய் விளங்கினார். அவரிடம் கற்றவர்கள் பலர் தமிழறிஞர்களாகத் திகழ்ந்தனர். சபாபதி நாவலர் என்பவரும் உரையாசிரியர் வேலுப்பிள்ளையும் பொன்னம்பலபிள்ளையின் மாணாக்கருட் சிறந்து விளங்கினார்கள். வைத்திலிங்கபிள்ளையென்பவர் தமது

குருவான நாவலர் வண்ணார்பண்ணையில் நிறுவிய பாடசாலையிலே தலைமை ஆசிரியராகப் பல ஆண்டுகள் சேவை செய்தார். செந்திநாத ஐயர் சமயநூற் கல்வியிலே சிறந்து விளங்கிப் பல நூல்களை எழுதினார். அவருடைய நீலகண்டபாஷ்யம் என்னும் நூல் பலராலும் வியந்து பாராட்டப்பட்டது.

இவ்வாறாக நாவலருடைய ஆசிரியப்பணி நிறைந்த பலனைத் தந்ததோடு அவர்தம் குறிக்கோளையும் நிறைவேற்றிவைத்தது. நாவலர்கள் பலரும் உருவாயினர்.

இரண்டு ஆண்டுகள் கழித்து (1847) அவர் மீண்டும் சமயப் பிரசாரகராக வேலைக்குத் திரும்பினார். வண்ணார்பண்ணைச் சிவன் கோவில் வசந்த மண்டபத்தையே தமது சமயப்பிரசங்கங்களுக்கு ஏற்ற இடமாகக்கொண்டு வெள்ளிதோறும் மாலையிலே பிரசங்கங்களைச் செய்துவந்தார். நாவலருடைய உடன் மாணாக்கராயிருந்த கார்த்திகேய ஐயரையும் இந்தச் சமய உணர்ச்சி பற்றிக்கொண்டிருந்தது. ஐயரும் நாவலருடன் சேர்ந்து இப்பிரசார வேலையில் ஈடுபட்டு வந்தார். கடவுள் உண்மை, கடவுள் வழிபாடு, கடவுட்பக்தி, சமயப்பற்று, சிவபூசை, சிவதீக்ஷை, கோயில் திருவிழாக்கள், மானிட வாழ்வின் குறிக்கோள், வாழ்வின் அந்தம், மது மாமிச பக்ஷணத்தைத் தவிர்த்தல் என்பனவே அவர்களுடைய பிரசங்கங்களில் முக்கியமானவையாகும். கார்த்திகேய ஐயருக்கென்று ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு தினத்திலே அவர் பிரசங்கம் செய்ய முடியாமற் போய்விட்டது. வந்திருந்த சபையோர் நாவலரையே பேசும்படி கேட்டுக்கொண்டார்கள். தாம் விஷயத்தை ஆயத்தம் செய்யவில்லையே என்று கூறினார். ஆயினும் சபையோர் அவரே அன்றைய பேச்சை நிகழ்த்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அன்புக் கட்டளையை மீறமுடியாத நாவலரும் ஆயத்தமில்லை (இறப்புக்கு) என்ற விஷயத்தையே தலையங்கமாகக் கொண்டு அருமையான பிரசங்கம் ஒன்றை நிகழ்த்தினார். ஆயத்தம் செய்து கொண்டுவந்து நிகழ்த்தும் பிரசங்கங்களை விட இது மிக அற்புதமாக இருந்ததென்று சபையோர் வியந்து போயினர்.

அவருடைய பிரசங்கங்கள் உணர்ச்சிகரமானவை மாத்திரமல்ல. அவை நம்பிக்கையின் உறுதிப்பாடும் கேட்போரைக் கேட்டபடி ஒழுகத் தூண்டும் கட்டுப்பாடும் அவற்றில் நிரம்பியிருந்தன. இப்பிரசங்கங்களின் பயனாகப் பலர் சிவதீக்ஷை பெற்றனர்; மாமிச போசனத்தைத்

தவிர்த்தனர்; கோவிலுக்கு ஒழுங்காகச் சென்று வழிபட்டுவரத் தொடங்கினர். சைவாசிரம தர்மங்களைக் கடைப்பிடித் தொழுகவும் தலைப்பட்டனர். இங்ஙனம் நாவலர் தமது சமயப் பிரசாரப் பணியைக் கிராமங்களிலும் மேற்கொள்ளத் தொடங்கினார். கிராமங்கள் சிலவற்றிலே பாடசாலைகளை நிறுவி அவை ஒழுங்காக நடைபெறுவதற்குத் தேவையான பொருளாதார வசதிகளையும் தேடிவைத்தார், கோப்பாயிலமைந்த அவருடைய பாடசாலை இன்னும் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. ஆனால் புலோலியிலமைந்ததோ அதனை நிர்வகித்தவர்களுடைய அசிரத்தை காரணமாகச் சீர்குலைந்து இறுதியில் மூடவேண்டிய நிலைக்குவந்தது. கந்தர்மடம், கொழும்புத்துறை, இணுவில், மாதகல் முதலாமிடங்களிலும் மற்றவர்களைக்கொண்டு அவர் பாடசாலைகளை நிறுவச்செய்தார்.

சைவசமய புனருத்தாரணப் பணிகளைச் செய்தது மாத்திரமன்றி கிறிஸ்தவக் குறுக்கீடுகளிலிருந்து அதனைக் காத்துக்கொள்வதற்கேற்ற சக்தியையும் நாவலர் தேடித்தந்தார். தம்முடன் கூடவே ஒரு பாடசாலை மாணாக்கராயிருந்த இருவரை மிஷனரிமார் விரித்த வலையிலே வீழ்ந்துபடாமல் காப்பாற்றிவைத்தார். எம். தில்லைநாதபிள்ளை எஸ். சின்னப்பாபிள்ளை ஆகிய இவ்விருவரும் குறிப்பிட்ட ஒரு தினத்திலே ஞானஸ்நானம் பெறுவதாக உறுதி கூறியிருந்தனர். சைவத்தின் மேம்பாடு பற்றியும் கிறிஸ்துவத்திலுள்ள குறைபாடுகள் பற்றியும் மிகத்தெளிவாகவும் உள்ளத்தில் உறுதியாகப் பதியும் வகையிலும் நாவலர் அவர்களுக்கு எடுத்து விளங்கப்படுத்தினார். அவர் கூறிய விளக்கங்களைக் கேட்டுத் தெளிவுபெற்ற அவர்கள் இருவரும் ஞானஸ்நானம் பெறும் எண்ணத்தைக் கைவிட்டார்கள். தில்லைநாதபிள்ளையோ பின்னர் நாவலருடைய அத்தியந்த சிஷ்யராகி அவருடைய பாடசாலையிலே ஆசிரியராய்ச் சேவை செய்வாராயினர். மற்றும் சின்னைப்பாபிள்ளை உயர் நீதிமன்ற நியாயவாதியாகிச் சைவசமயத்துக்கும் அளப்பரிய சேவையாற்றினார்.

நமது சமயத்தின் மீது கிறிஸ்தவர்கள் நடத்தி வந்த தாக்குதல்களையெல்லாம் புறங்காணும் நோக்கத்தோடு நாவலர், சுப்பிரபோதம், சைவ தூஷண பரிகாரம் என்னும் நூல்களிரண்டை எழுதி வெளியிட்டார்.

" தாம்கொண்ட கொள்கையை நிறுவத் தமது சமய உண்மைகளைப் பாதுகாப்பதற்காக எடுத்தாண்ட நூல்களைப் பார்க்கும்போது

ஆச்சரிசமாயிருக்கிறது. எந்தெந்த வகையிலெல்லாம் எதிர்ப்பும் மறுப்பும் தோன்றக்கூடுமோ அவற்றையெல்லாம் எதிர்பார்த்து அவற்றுக்கெல்லாம் தர்க்க ரீதியான பதில் கூறி விளக்கியிருக்கும் சாதுரியத்தை உண்மையிலே முதல்தரமான நுண்ணறிவு படைத்த ஒருவரிடத்திலே தான் காணமுடியும். இந்நூல் நமக்குப் பெருந்தீங்கையன்றோ விளைவிக்கின்றது?'' இவ்வாறாக 1855 இல் இங்கிலாந்திலே அச்சிடப்பட்ட வெஸ்லியன் மெதடிஸ்த அறிக்கையிலே சைவதூஷண பரிகாரம் என்ற நாவலருடைய நூலைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

சைவசமயத்தின் அடிப்படையான அறிவைப் பெறாதவர்களே புராணங்களை விமர்சிக்கப் புறப்பட்டு. சிவனும் சுப்பிரமணியரும், தத்தமது சக்திகளை உண்மையாகவே திருமணம் புரிந்ததாகக் கூறி வருகிறார்கள். ''சுவரூபி, எங்கும் நிறைந்தவர் என்பதையும் 'கடவுள் திருமணம் புரிந்தார் என்பது அபத்தம்' என்பதையும் ஓரளவு சமய அறிவு படைத்தவர் எவரும் அறிவர்'' என்று நாவலர் தமது சுப்பிர போதத்திலே கூறியுள்ளார். கோவில்களிலே தாசியர் நடனங்களை நடத்தும் துராக்கிருதமான செயல்களைத் தவிர்த்து அதற்குப் பதிலாக, தேவாரப் பண்களை இசைத்தல், சமயப் பிரசங்கங்களைச் செய்வித்தல் போன்ற நல்ல காரியங்களைச் செய்விக்குமாறு கோவிலதிகாரிகளுக்கும் அந்நாளிலே நாவலர் அறிவுரை வழங்கினார்.

மிஷனரிமாரும் அவர்களால் மதமாற்றம் செய்யப்பட்டவர்களும் கையாண்டுவந்த கபட நாடகங்களையெல்லாம், யாழ்ப்பாணச் சமய நிலை, யென்னும் மற்றுமொரு நூலிலே நாவலர் வெளிப்படுத்தியுள்ளார். ஆரம்பத்திலே நம்மவரை அவர்கள் போதனைகள் மூலம் மதம் மாறச் செய்ய முயன்றார்கள். அதிலே அவர்கள் எதிர்பார்த்த வெற்றியைக் காணமுடியவில்லை. எனவே பாடசாலைகளை ஆரம்பித்து அவற்றிலே கல்வி பயிலவரும் மாணவர்களையும் அவற்றில் உபாத்திமைத் தொழிலை ஏற்க விரும்பி வந்தவர்களையும் கவரும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால் அக்காலத்திலே அரசாங்க பாடசாலைகளும் இயங்கிவந்தமையால் பலரும் அவ்வரசாங்கப் பாடசாலைகளையே நாடிச்சென்றனர். இதனைக் கண்ட மிஷனரிமார் அரசாங்கத்திலே தமக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி அவ்வரசாங்கப் பாடசாலைகளை மூடிவிடச் செய்தனர். இதனால் கல்வித்துறையிலே அவர்களே எதிர்ப்பாரற்ற அதிகாரிகளாயினர். ஆசிரிய உத்தியோகம் பெறுவதற்

காக நம்மவர் பலர் கிறிஸ்தவராயினர். இவர்களுட் சிலரைப் பாதிரிமார் குருவானவர்களாக்கிப் பூச்சியர் (றெவரெண்ட்) என்ற பட்டத்தையும் வழங்கினார்கள். அரிசிக்கும் நெல்லுக்கும் பஞ்சம் ஏற்பட்டாலும் இந்தப் பூச்சியர் பட்டங்கள் மட்டும் மலிந்துவந்தன என்று நாவலர் கூறுகின்றார். இந்தப் பூச்சியர்களும் உள்ளத்தின் உள்ளத்திலே நல்ல சைவர்களாகவே இருந்தார்கள். இவர்கள் சைவாலயங்களுக்குப்போய் பூசைகள் செய்விக்கவும் திருவிழாக்கள் நடத்தவும் பணம் கொடுத்துவந்தனர். பள்ளிக்கூட நேரங்களில் மாத்திரம் இவர்கள் கிறிஸ்தவத் தோற்றம் காட்டிவந்தார்கள். தன்னால் மதமாற்றம் செய்யப்பட்ட இவர்களுக்குக் கிறிஸ்தவத்திலே நம்பிக்கை இல்லை என்பதைப் பாதிரி நன்குணர்ந்திருந்தாரெனினும் இரண்டு காரணங்களுக்காக அவைகளைத் தம்முடன் வைத்திருந்தார். இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள மிஷன் சபைகளுக்கு ஆண்டுதோறும் அனுப்பும் அறிக்கைகளிலே தாம் பலரை மதமாற்றம் செய்துவைத்திருப்பதாக அறிவிக்கவேண்டியிருந்தது. அப்படிச் செய்யாவிடில் இவர்களுடைய வேலை பறிபோய்விடும் என்பது ஒரு காரணம். மற்றது வெளிப்படைக்குக் கிறிஸ்தவராகத் தோற்றத்தளவில் விளங்கும் இவர்களுடைய சந்ததியினராவது உண்மைக் கிறிஸ்தவராகக்கூடிய வாய்ப்பு ஒன்று இருந்துவந்தது. மிஷனரியை ஏமாற்றிய முறைகள்பற்றி நாவலர் நான்கு சம்பவங்களைக் கூறியுள்ளார். சம்பந்தப்பட்டவர்கள் அவர் காலத்திலே உயிரோடிருந்தனராகையால் அப்பொழுது அச்சம்பவங்கள் சுவையுள்ளனவாயிருந்தன. ஆனால் இப்பொழுது அவர்கள் காலமாகிவிட்டனராகையால் மாதிரிக்குத்தானும் ஒரு சம்பவத்தை நான் இங்கே கூறமுடியாதவனாயிருக்கிறேன்;

நாவலர் வைசமய வளர்ச்சிக்காக இங்ஙனம் பல வழிகளில் பணியாற்றிவந்த பொழுது அவருடைய நண்பர்களான நீர்வேலிச் சங்கரபண்டிதரும் தாமோதரம்பிள்ளை (பீ. ஏ., பீ. எல்.) யும் கிறிஸ்தவ மதத்தை நேர்நின்று தாக்கி வந்தனர். சென்னைச் சர்வகலாசாலையிலே முதன் முதலிற் பட்டம் பெற்ற இருவருள் ஒருவரான விசுவநாதபிள்ளை (மற்றவரே தாமோதரம்பிள்ளையாவர்) கிறிஸ்தவராயிருந்துகொண்டு சைவசமயத்தைத் தாக்கிவந்தார். பின்னால் அவர்தம் செய்கைக்காக வருந்திச் சைவசமயத்திலே பிரவேசித்ததோடமையாது தாம் சைவசமயத்தை எதிர்த்து எழுதிவந்ததற்கெல்லாம் பிராயச்சித்தமாகச் சிதம்பரத்திலே சென்று தமது நாவிலே பொன்னூசியால் சூடு போட்டுக்கொண்டு உண்மையான சைவராகி நாவலரைப் பின்பற்றி ஒழுகும் சீலம் மிகுந்தவரானார்.

சைவசமய அநுட்டானங்களில் எங்காவது வெளிப்படையான பெரிய தவறு கண்டால் நாவலர் கொஞ்சமேனும் தயக்கமின்றித் தமது எழுத்துக்களாலும் பிரசங்கங்களாலும் கண்டித்துவந்தார். வியாபார நோக்கோடு சமய அநுட்டானங்களில் தவறி நடக்கும் சைவக்குருமாரைக்கூட அவர் விட்டுவைப்பதில்லை. "மரமேறும் வகுப்பினைச் சேர்ந்தவர்களுட் சிலர் கள்ளுண்பதை விட்டுவிட்டனர். புலையூரிலே சிலர் மாட்டிறைச்சி உண்பதை நிறுத்திவிட்டார்கள். இங்ஙனமாக அவர்கள் திருந்தி வாழ்கிறார்கள். ஆனால் வெற்று நெற்றி வேளாளர் சிலர் கிறிஸ்தவர்களுடன் கூடிச் சாராயம் குடித்து மாட்டிறைச்சியும் உண்கிறார்கள், இவர்களுடைய திருமணச்சடங்குகளையும் ஈமக்கிரியைகளையும் செய்துவைக்கும் பிராமணர்களும் சைவக்குருமாரும் இருக்கிறார்கள். இவர்களுள் யார் மதிக்கத்தகுந்தவர்கள்? முன்னையவர்களா? பின்னையவர்களா? இங்ஙனம் தாமெழுதி வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றிலே நாவலர் கேட்கிறார்.

சைவசமயச் சடங்குகளிலே காணப்படும் ஒழுக்கவீனங்களைக் களைவதற்கு வேண்டிய பணிகளை மேற்கொண்ட நாவலர், சமய சம்பந்தமாக ஆக்கபூர்வமான பணிகளுக்குதவும் பொருட்டு நல்ல நூல்களையும் எழுதத்தொடங்கினார். சைவசமயத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் தன் சமயத்தைப் பற்றித் தெரிந்திருக்கவேண்டிய விஷயங்களை அவர் தமது முதலாம், இரண்டாம் சைவ வினா விடைகளில் இரத்தினச் சுருக்கமாகக் கூறியிருக்கிறார், இச்சிறு நூல்களை நாவலர் தாமே பிரசுரித்து அடக்க விலையிலே விற்பனைக்கு விட்டார். படிக்கத் தெரிந்த ஒவ்வொரு சைவனும் அவருடைய முதலாம் பால பாடத்தை வாங்கிப் படித்து அதன்படி ஒழுகவும் தலைப்பட்டனர். மற்றெல்லாவற்றையும் விட இச்சிறிய நூலானது மக்கள் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி அவர்களை நல்ல சைவசமயிகளாக்க உதவிற்று: தமிழாசிரியர் ஒவ்வொருவரும் இந்நூலைக் கற்பிப்பதையே குறியாகக் கொண்டனர். இங்ஙனம் இச் சிறிய நூல்கள் சைவ இல்லங்கள் தோறும் மிளிர்ந்தன. இந்நூலிலே சேர்க்கப்பட்டிருந்த தோத்திரப் பாடல்களை எல்லாம் சிறுவர்கள் மனனம் செய்து வந்தனர். "மண்ணுலகத்தினிற் பிறவிமாசற" என்று தொடங்கும் விநாயகர் தோத்திரத்தையும் "மூவிருமுகங்கள்...... " என்று தொடங்கும் சுப்பிரமணியர் தோத்திரத்தையும் தெரியாதவர் அந்நாட்களில் இல்லை, சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் காலரா நோய்த் தடுப்புப் பணியிலீடுபட்டிருந்த நடுத்தரவயதினரான ஒருவர் காலரா ஆசுப்பத்திரிக்கு

இரவிலே செல்ல நேரும்பொழுதெல்லாம் காலரா நோய் பரப்பும் பிசாசுகளை விரட்டும் என்ற நம்பிக்கையோடு "மூவிருமுகங்கள் போற்றி....." என்ற தோத்திரத்தைப் பாடிக்கொண்டு போவதை நான் கேட்டிருக்கிறேன். மற்றும் நாவலருடைய நான்காம் பால பாடமோ ஒரு சமயக் கருவூலமாகும். சைவாகமங்களின் சாரத்தைப் பிழிந்து அந்நூலிலே நாவலர் தந்திருக்கிறார். உசாத்துணை நூலாக அது பெரிதும் பயன்படுவதொன்றாகும். சமய அனுட்டான முறைகளில் நமக்கு ஏதாவது சந்தேகங்கள் தோன்றினால் நாம் அந்நூலைப் பார்த்துத் தெளிவடைந்து கொள்ளலாம்.

பண்டைக்கால ஆலயங்களிரண்டைப் புனருத்தாரணம் செய்யும் பணியிலும் நாவலர் ஈடுபட்டார். கீரிமலைச் சிவன்கோவில் அப்பொழுது மறைந்துபோயிருந்தது. அத்தலம் பற்றிய துண்டுப் பிரசுரமொன்றை அவர் எழுதி வெளியிட்டார். அவ்வாலயத்தைப் புனருத்தாரணம் செய்யுமாறு அத்துண்டுப் பிரசுரத்தின் மூலம் அவர் சைவப் பொது மக்களைத் தூண்டிவிட்டார். மக்களும் அப்பணியிலே பெரிதும் ஆர்வம் கொண்டனர். அவர் கீரிமலை சென்று இடங்களை ஆராய்ந்து பண்டு ஆலயம் இருந்த இடத்தைக் கண்டுபிடித்துக் கோவில் அமைய வேண்டிய முறையை விளக்கும் படமொன்றையும் வரைந்து உதவினார். பிராமணக் குருமார் சிலரையும் இப்பணியிலீடுபட்டுழைக்கச் செய்தார். அவர்களும் அப்பணியில் ஈடுபட உடன்பட்டனர்.

அடுத்தது திருக்கேதீச்சரமாகும். அவர் இப்பகுதி இருந்த இடத்தைச் சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களாலறிந்தார். ஆலயம் மறைந்து விட்டது. அது அமைந்திருந்த இடமும் அரசுடைமையாயிருந்தது. அப்பகுதியை விலைக்குத் தருமாறு அரசாங்கத்துக்கு விண்ணப்பித்தார். ஆனால் அப்பொழுது வடமாகாண அரச அதிபராயிருந்த துவைனம் என்பவர் அவ்விடத்தை விற்பதற்கு அங்கீகாரம் வழங்க மறுத்துவிட்டார். எனவே நாவலர் சைவப் பொதுமக்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தார்.

□

# இயல் 3

## சமயப்பணிகள்

திருக்கோவில்களிலே நடைபெறும் ஒழுக்கக் கேடுகள் மீது நாவல ருடைய கவனம் திரும்புகிறது. அங்கெல்லாம் நடைபெறும் தாசியர் நடனத்தை அவர் முழு மூச்சுடன் கண்டித்து வந்தார். ஆலய பரி பாலகர்கள். அவ்வாலயங்களைத் தவறான முறையிலே நடத்தி வரு வதையும் அவர் கண்டித்தார். இவ்விரு விஷயங்களிலும் சம்பந்தப் பட்டவர்கள் நாவலருக்குப் பகைவராயினர். நாவலரைத் தாக்குவ தற்கென ஒருசமயம் கூலிப்படையினர் சிலர் அவருடைய வீடு தேடிச் சென்றனர். ஆயினும் நாவலருடைய ஆப்த நண்பரொருவருடைய செல்வாக்கினால் இக் கூலிகள் கலைந்து செல்ல வேண்டியதாயிற்று.

தேர்த்திருவிழா நாளிலே பலியிடும் வழக்கத்தை நாவலர் கண்டித் தார். "தேர்ச்சில்லிலே ஆட்டுக்கடா பலியிடுவதைத் தவிர்ப்பதால் ஏற்படுவது புண்ணியமன்று; அதன் விளைவாக நமக்குக் கேடுதான் வருமென்றல்லவா கூறுகிறார்கள், அந்தோ பரிதாபம்! சமுத்திரங் களிலே நீண்ட தூரம் பிரயாணம் செய்யப் புறப்படுமுன் கப்பல் களிலே ஆட்டுக்கடா பலியிடப்படுவதில்லையே இம்மாபெருங் கப்பல்கள் தமது நீண்ட நெடும் பிரயாணங்களைக் குறைவின்றி முடித்துக்கொண்டு மீண்டு வந்து சேருகின்றன என்பதை யாவருமறி வரே! திருவாரூர், திருவிடைமருதூர்த் தேர்களெல்லாம் இத்தகைய பலியில்லாமலே வீதிவலம் வருகின்றனவே. இந்த யாழ்ப்பாணத்தில் இருக்கும் இந்தக் குட்டித் தேர் மட்டும் பலிகொடாவிட்டால் திரும்பா தென்பதை நாம் நம்பத்தான் வேண்டுமா?" இவ்வாறு நாவலர் தேருக்குப் பலியிடும் வழக்கத்தைக் கண்டித்து எழுதுகிறார்.

இனி, கண்ணகி கோவில்களிலே சைவக் குருமார் பூசை செய்வ தைப் பற்றி நாவலர் கூறுவதைப் பார்ப்போம். இக்கண்ணகி கோவில் களிலும் ரோமன் கத்தோலிக்க தேவாலயங்களிலும் நம் சைவமக்கள் சென்று வழிபடுவது நமது சமயத்துக்கடுக்காது என்று அவர் எடுத்துக் காட்டுகிறார். "ஜைனமதச் செட்டிச்சியான கண்ணகியின் இருமருங் கிலும் விநாயக, சுப்பிரமணிய விக்கிரகங்களை அச்சமின்றி வைத்துப் பூசிக்கும் அதிபாதகர்களாகிய இவர்களும் அன்றோ சைவக் குருமார் என்று கணிக்கப்படுகிறார்கள்" என்று நாவலர் குறிப்பிடுகிறார். பதினேழு நூற்றாண்டுகளுக்கு முன் கஜபாகு மன்னன் இவ்வழிபாட்டு

முறையை இலங்கை மக்கள் மீதும் திணித்தான். அவனுடைய மறை வுடன் இந்த வழிபாட்டு முறையும் மறைந்துபோயிருக்கும். ஆனால் நமது சைவக் குருமாரன்றோ இக்கோயில்களில் இன்றும் இவ்வழி பாட்டு முறையைக் கைவிடாது பூசாகாரியங்களைச் செய்து வந்தார் கள். செய்தும் வருகிறார்கள்

நாவலர் தமது காலத்திலிருந்த சைவக் குருமாரையும் கண்டிக்கத் தவறவில்லை. சைவ மக்களை விளித்து அவர் பின்வருமாறுபேசுகிறார்: "அரசாங்கத்துக்கு ஆண்டுக்கொருமுறை வரிப்பணமாகத் தொண் ணூறு சதத்தைக் கொடுக்க மனமின்றிக் கொடுக்கிறீர்கள், ஆனால் இந்த அற்ப தொகைப் பணத்துக்கு அரசாங்கம் உங்களுக்கு அருமை யான தெருக்களை அமைத்துத் தருகிறது. நீங்கள் எங்கெல்லாம் போக விரும்புகிறீர்களோ அங்கெல்லாம் சௌகரியமாகவும் வசதியாகவும் இத்தெருக்களில் நீங்கள் பிரயாணம் செய்யக்கூடியதாயிருக்கிறது. உங்கள் குருமாருக்கும் நீங்கள் அரிசி, பருப்பு, நெய் என்பவற்றோடு ரூபாக்களாகவும் பணம் கொடுக்கிறீர்கள். அவர்களிடமிருந்து நீங்கள் எதனைப் பெற்றுக்கொள்கிறீர்கள்? உங்கள் குழந்தைகளுக்கு அவர் கள் சமயத்தையோ அல்லது நெறிமுறைகளையேனுமோ கற்றுத் தருகிறார்களா? உங்கள் கோவில்களிலே ஏதாவது போதனைகள் செய்கிறார்களா? பாடசாலைகளை நிறுவி உங்கள் குழந்தைகளுக்குக் கல்வி புகட்டுகிறார்களா? சைவசமயத்திலுள்ள எவரேனும் ஒருவர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவ விரும்புகிறார் என்று அறிந்தால் அன் னவரை அணுகி, சைவத்தின் மேன்மையை எடுத்துணர்த்தி மிஷனரிக்கு இரையாகாமல் அவரைக் காப்பாற்ற முயற்சி செய்கிறாரா? உங்கள் வீடுகளுக்கு வரும் சமயங்களில் கொலை செய்தல், புலாலுண்ணல், மதுவருந்தல் என்பன விலக்கப்பட வேண்டிய பாதகங்கள் என்று இவ்வாறான நெறிமுறைகளை உங்களுக்கெடுத்துச் சொல்வதுண்டா? மிஷனரிகள் எங்கள் சமயத்தைத் தாக்கிப் பேசும்போது எதிர்வாதம் புரிந்து நமது சமய உண்மைகளை எடுத்து நிலைநாட்டுவதுண்டா? அந்தியேஷ்டி என்ற பதத்தைச் சரியாக உச்சரிக்கக்கூடிய குருமார் எத்தனைபேர் இருக்கிறார்கள்? தச்சர், கொல்லர், சலவைத்தொழி லாளர் என்பவர்களில் தத்தம் தொழில் தெரியாதவர்களை நீங்கள் அழைத்து வேலை செய்விப்பீர்களா? அங்ஙனமிருக்கத் தனது பணி செவ்வனே செய்யத் தெரியாத குருக்களை ஏன் நீங்கள் அழைக்க வேண்டும்?

ஆகமங்களில் உள்ள வாக்கியங்களை அன்றி, அதற்றின் தத்துவங்களையே நாவலர் போற்றி வந்தார். சிராத்தாதி காரியங்களைத் தவறாமல் செய்யவேண்டுமென்று சொல்லும் அதே சமயத்தில் அக்காரியங்களைச் செய்துவைத்துத் தானங்களைப் பெற்றுக் கொள்ள வரும் குருக்கள் கல்வி கேள்விகளில் சிறந்தவராயும் தம்முடைய சமயானுஷ்டானங்களைத் தவறாமல் செய்பவராயும் சிராத்தாதிகாரியங்களைப் பத்தியோடும் சிரத்தையோடும் செய்பவராயுமிருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி வந்தார். இத்தகைய சிறப்புக்களில்லாத குருமாருக்குத் தானம் கொடுத்தால் கொடுத்தவன் நரகத்துக்குத்தான் போகநேரிடும். இன்னும் சாதிப்பாகுபாடு பற்றிப் பேசும் போதும் அவர் ''பிராமணரில் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்றும் க்ஷத்திரியரில் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்றும் வைசியரில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் சூத்திரர் என்றும் இருக்கிறார்கள் என்றும் கூறுவர். சாதியென்பது பிறப்பினால் மட்டுமல்ல ஆசிரம தர்மங்களைக் கடைப்பிடிக்கும் முறையினாலுமே நிர்ணயிக்கப்படுவதாகும் என்பதே நாவலருடைய கொள்கையாகும்.

நாயன்மார் பாடியருளிய தேவார திருவாசகங்கள் எல்லாம் இறைவனுடைய அநுபூதிபெற்ற பாடல்கள் என்பதும் வேதங்கள், ஆகமங்களை அணுகுவதற்குத் தமிழில் கிடைத்த திருநெறியென்பதும் நாவலருடைய கருத்தாகும். இவற்றையே அவர் 'அருட்பா' என வழங்கினார். அதனாலேயே தம் காலத்தில் வாழ்ந்தவரும் நாயன்மாரைப்போல மதிக்கப்படாதவருமான ஒருவர் பாடிய கவிகளை 'அருட்பா' என்று வழங்கியதைக் கண்ட நாவலர் மனம் பதைத்து தேவார திருவாசகங்களைப் பாடியருளிய நமது நாயன்மாரையும் இந்தக் கவிகளைப் பாடியவருடைய தரத்துக்கு இறக்குவதா என்று சினந்து சாடினார்.

□

## இயல் 4

# இலக்கியப்பணி

தமிழிலக்கியங்களைக் கற்பவர்கள் அக்காலத்திலே தாம் கற்க விரும்பும் இலக்கியங்களை முதலில் ஓலைச் சுவடிகளிலே எழுதிக் கொள்ள வேண்டியிருந்தது. இங்ஙனம் படிப்பதற்கு முன் ஏட்டுப்பிரதி களை எழுதும் வேலை மிகவும் சிரமசாத்தியமானதாயிருந்தமையால் அதற்குரிய பொறுமை அற்றவர்களால் இலக்கியங்களைக் கற்க முடியாமலிருந்தது. எனவே நாவலர் இவ்விலக்கிய நூல்களை அச்சில் பதிப்பிக்க முற்பட்டார். மேற்கூறிய கையெழுத்துப்படிவங் களிலே பலவிதமான பிழைகள் மலிந்திருந்தன. அதனால் இக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றை நாவலர் சேகரித்து அவற்றை ஒப்புநோக்கிச் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்தார். பின்னர் சிறந்த பிரதியெனக் கண்டதைத் தாமே கடதாசியில் எழுதி அச்சகத்துக் கனுப்பிப்பதிப்பிக்கச் செய்தார். இவ்வாறு கந்தபுராணம், பெரிய புராணம், பாரதம் என்னும் நூல்களை அவர் அச்சிற் பதிப்பித்தார். பெரியபுராண சூசனத்திலே பேசப்பட்ட நாயன்மார் வாழ்ந்த சீரிய வாழ்வின்கண் பொதிந்துள்ள தத்துவார்த்தங்கள், உளப்பாங்குகள் என்பவற்றைப் பெரியபுராண சூசனத்திலே நாவலர் நயம்பட எடுத்துக்காட்டியுள்ளார். ஆகம சாத்திர உண்மைகள் பலவற்றை ஆதார மாக எடுத்துக் காட்டி விளக்கியிருக்கும் அந்நூலிலே அளவிறந்த போதனைகளைக் காணலாம். நிகண்டு என்னும் நூலை அதற்கொரு வசன விளக்கமும் கொடுத்துப் பதிப்பித்துள்ளார். மற்றும் நன்னூ லுக்கு விளக்கவுரையொன்று மெழுதிப் பதிப்பித்துள்ளார். தமிழி லக்கியக் கல்விக்கு இவ்விரு நூல்களும் இன்றியமையாத ஆதார நூல் களாகும். பின்னர் நன்னூலுக்கு மிக விரிவான விளக்கவுரையொன் றும் எழுதிப் பதிப்பித்ததோடு திருக்குறள் பரிமேலழகருரை, திருக் கோவையார் பேராசிரியருரை என்னும் நூல்களையும் நாவலர் அச்சிற் பதிப்பித்தார்.

பாடசாலை மாணவர்க்குப் பயன்படும் வகையிலே இலக்கண வினாவிடை, இலக்கணச்சுருக்கம் என்னும் நூல்களையும் எழுதி வெளியிட்டார். வசனநூல்கள் பலவற்றையும் அவர் எழுதியிருக்கி றார். தமிழுக்கு வசனநடை வகுத்த ஆரம்பகால ஆசான்களுள் நாவ லர் முன்னோடியாகத் திகழ்கின்றார். அவருடைய காலத்துக்கு முன்பு

இருந்த சைவநூல்கள் பெரும்பாலும் இலக்கியங்களுக்கு விரிவுரைகள் என்ற வகையிலேயே இருந்தன. ஆனால் நாவலருடைய வசன நடையோ பலராலும் பாராட்டி வரவேற்கப்பட்டது. பெரியபுராண வசனம், திருவிளையாடற்புராண வசனம், கந்தபுராண வசனம், என்பன நாவலருடைய வசனநூல்களில் சிறந்தனவாகும். கந்த புராண வசனம் என்பது புராணச் செய்யுட்களை அப்படியே வசன மாக்கியதுபோல அமைந்துள்ளது.

கந்தபுராணம் என்பது மிகச் சிறந்த ஒரு நூலாகும். செய்யுள் நடை எளிமையானது. அத்துடன் சிறந்த இசை அமைப்பும் கொண்டது. கந்தபுராணத்திலெடுத்தாளப்பட்ட உவமைகள், உருவகங்கள் யாவும் ஒப்புயர்வற்றன. அது பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஒரு பெருங் கருவூலமாகும். சைவம், வைஷ்ணவம், வேதாந்தம், ஏகான்மவாதம் என்பவை மட்டுமன்றி லோகாயதமும் கந்தபுராணத்திலே பேசப்படுகிறது. விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் ஆகிய சிவமூர்த்தங்கள் நான்கின் தோற்றங்கள் அதிலே கூறப்பட்டிருக்கின்றன. நடைமுறை வழக்கினோடு தொடர்புபடுத்தி நீதி நெறிகள் போதிக்கப்பட்டு, அணுகுண்டு உற்பத்தி செய்யும் இக் காலத்தவர்களுக்கே தெரியாத போர்க்கருவிகள் பற்றிக் கந்தபுராணம் பேசுகிறது. சமய சம்பந்தமான கருத்துக்கள் நிரம்பியிருப்பதே கந்தபுராணத்தின் தனிச்சிறப்பெனலாம். தமிழ்ப் பெருங்காப்பியங்கள் ஒவ்வொன்றிலும் திருமணச்சடங்குகள் பற்றியும் பாடப்படுவது ஒரு வழக்கமாகையால் இதிலும் சிவனுடைய திருமணம், சுப்பிரமணியர் திருமணம் என்பன அமைந்துள்ளன. கடவுளுக்கு உருவமில்லை; ஆசா பாசமில்லை; தேவைகளுமில்லை. அங்ஙனமிருக்கக் கடவுளுக்கு உண்மையான திருமணச் சடங்கு என்று பேசுவது அர்த்தமற்றது.

அண்ட சராசரங்கள் சிருஷ்டிக்கப்படும்போது இறைவனுடைய சக்தி வியாபகமாகிறது. சித்தாக இருக்கும் இறைவன் சக்தியோடு கூடுகிறான். இந்தச் சக்தி வியாபகத்தை அன்னையென்றும் உமா தேவியென்றும் கூறுகின்றோம். சிவசக்தி சம்மேளனத்தையே திருமணம் என்று புராணங்கள் கூறுகின்றன. சக்தி விகற்பங்கள் மூன்று வகையாகும். இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானா சக்தி, ஆகிய இம்மூன்றும் முறையே பிரபஞ்சத்தைக் கட்டுப்படுத்தவும் தொழிற்படுத்தவும் அறிவொளி பெறவும் செய்கின்றன, இம்மூன்றி

னுள்ளும் கிரியா - ஞானா சக்திகளைக் கந்த புராணம் தெய்வயானை அம்மை, வள்ளியம்மை என்று கூறும். இந்தச் சக்திகளின் வெளிப் பாடே சுப்பிரமணியருடைய திருமணங்களாகப் பேசப்படுகின்றன. இவ்வாறே பெரியபுராணத்திலும் பரவையார், சங்கிலியார் என்ற பெண்களைச் சுந்தரர் திருமணம் செய்துகொண்டார் என்று கூறப் பட்டுள்ளது. ''தம்பிரான் தோழர்'' என்று சிறப்பித்துக் கூறப்படும் சுந்தரர் பெண்களுடைய உடலழகினால் கவரப்பட்டவரல்லர். சீவன் முத்தர் ஒருவருக்கும் ஏனைய ஆன்மாக்களுக்கும் இடையிலே நிலவக் கூடியது குரு சிஷ்யத் தொடர்பு ஒன்றேதான். முத்திசாதனம் கைகூடக்கூடிய பக்குவநிலையெய்தியிருந்த அவ்வாத்மாக்களிரண்டுக் கும் சுந்தரர்க்குமிடையில் நிலவிய தொடர்பு குரு சிஷ்ய பாவமே யாகும். பேரிலக்கியமொன்றுக்கு இருக்க வேண்டிய அமைதி கருதியே பெரிய புராண ஆசிரியர் அவற்றைப் பரவையார், சங்கிலியார் திரு மணங்களாகப் பாடிவைத்துள்ளார். இங்ஙனமாக நாவலர், சுப்பிர போதம் என்னும் நூலிலே இத்திருமணங்களின் தத்துவங்களை நன்கு விளக்கியுள்ளார்:

சைவசமயநெறி, திருமுருகாற்றுப்படை, கோயிற் புராணம் மற் றும் சர்வோக்தம் என வழங்கும் சிவாகமத்தின் ஒரு பகுதியான சிவ தருமோத்தரம் என்பவற்றிற்கு விளக்க உரைகள் செய்திருக்கிறார்,

இன்னும் கையெழுத்துப் பிரதிகளாயிருந்த இலக்கண இலக்கிய நூல்கள் பலவற்றைத் திருத்திப் பதிப்பிக்கவும் நாவலர் உதவியிருக் கிறார். அவற்றுள் சேனாவரையருரையுடன் கூடிய தொல்காப்பியப் பதிப்பே மிகவும் பிரபலமானதாகும்.

□

# இயல் 5

## இந்தியாவில் நாவலர்

யாழ்ப்பாணத்தில் நாவலர் சொந்தமாக வைத்திருந்த அச்சகம் அவருடைய தேவைகளுக்கு எவ்வாற்றாலும் போதியதாக இருக்கவில்லை. எனவே தமது அச்சகப் பணிகளைச் செவ்வனே செய்வதற்குச் சென்னை செல்லவேண்டியதாயிற்று. அங்ஙனம் அங்கே செல்வதற்குக் காகிதச் செலவும் வேலைக் கூலியும் சென்னையில் மலிவாகக் கிடைத்ததும் மற்றும் ஒரு காரணமாகும். சென்னையிலே நாவலர் அச்சகம் ஒன்றைச் சொந்தமாகவே நிறுவி அதனுடைய நிர்வாகப் பொறுப்பைத் தமது அத்யந்த சிஷ்யர் சதாசிவபிள்ளை என்பவரிடம் ஒப்படைத்துவிட்டுச் சிதம்பரம் சென்றார். சிதம்பரம் அவருக்குத் தாய் வீடு போன்றது. சைவ உலகின் தலை நகரமே அதுவன்றோ? கத்தோலிக்கருக்கு உரோமா புரியும் முஸ்லீம்களுக்கு மக்கமாநகரும் எப்படியோ அப்படியானது சிதம்பரம், சைவசமயிகளுக்கு. நமது நாயன்மார்கள் இதனைக் 'கோயில்' என்றே சிறப்பித்து வழங்குவர். அடைமொழியின்றித் தனியே 'கோயில்' என்ற பதம் சிதம்பரத்தையே குறிப்பதாகும். நாவலர் அங்கே பாடசாலை ஒன்றை நிறுவி அதற்கு நிபந்தமும் செய்துவைத்தார். சபாபதி நாவலர், ஆசாரிய வேற்பிள்ளை போன்ற சிறந்த ஆசிரியர்கள் அப்பாடசாலையில் அதிபர்களாயிருந்து தமிழறிஞர் பலரை உருவாக்கினார்கள். அப்பாடசாலையின் நிபந்தங்கள் மூலமாகக் கிடைக்கும் வருட வருமானம் இப்போது 25,000 ரூபாவாகும்.

இனி சிதம்பர ஆலயத்திலே சைவாகம விதிமுறைகள் கைக்கொள்ளப்படவில்லை என்பதை நாவலர் அறிந்தார். தீக்ஷிதர்களும் உண்மையானசைவர்களல்லர், அவர்கள் சிவதீக்ஷை பெறாதவர்கள். எனவே அவ்வேதியர்கள் ஆகம விதிமுறைகளுக்கமைந்தொழுகச் செய்யவேண்டுமென்று நாவலர் மேற்கொண்ட முயற்சிகள் வியர்த்தமாயின. சிதம்பரத்து வேதியர்கள் சிவதீக்ஷை பெற்றிருக்க வேண்டியதனவசியம் பற்றியும் ஆகம விதிமுறைக் கொவ்வாத பூசைகள் முறையற்றன என்றும் தமது பாடசாலையிலே நாவலர் உபந்நியாசம் ஒன்றை நிகழ்த்தினார். அவர்களைச் சீர்திருத்துவதற்குப் பதிலாக இந்த உபந்நியாசம் அவ்வேதியர்களுடைய ஆத்திரத்தையே கிளர்ந்தெழச் செய்துவிட்டது. தெய்வத்துக்கு அடுத்தபடியில் வைத்து மதிக்கப்பட்டவர்களான அவ்

வேதியர்களால் இவ்விதமான கண்டனங்களைப் பொறுக்க முடிய வில்லை. அவர்கள் ரௌத்ராகாரமாக எழுந்தார்கள். அவர்களுடைய கூலிப்படையொன்று நாவலரைத் தாக்கவும் சென்றது. ஆயினும் அவர்கள் எவ்வாறோ கலைந்து சென்றனர்.

இந்தியாவிலிருந்த பொழுது நாவலர் புண்ணிய ஸ்தலங்கள் பல வற்றையும் தரிசித்தார். ஆங்கெல்லாம் உயர்ந்த பொருள் பொதிந்த உபந்நியாசங்கள் பலவற்றையும நிகழ்த்தினார். நாவலர் கும்பகோணத் தில் இருந்த சமயம் அவரைக் கௌரவிப்பதற்காகத் திருவாவடுதுறை ஆதின முதல்வர் தமது மடத்துக்கு அழைத்தார். சைவ உலகின் ஆத் மீகத் தலைவராக மதிக்கப்பட்டவர் இவ்வாதீன முதல்வர். நாவலரை மிகுந்த அன்புடனும் ஆதரவுடனும் வரவேற்று அவர் உபசரித்தார். அவருடைய வேண்டுகோளுக்கிணங்க நாவலரும் அங்கே அரியதோர் உபந்நியாசத்தை நிகழ்த்தினார். அவரைக் கௌரவிப்பதற்காகவோ, அல்லது மடத்தின் கௌரவத்தை உயர்த்திக் கொள்ளவேதானோ ஆதீன முதல்வர் ''நாவலர்' என்ற பட்டத்தைச் சூட்டினார், நாவலரும் அங்கே சில நாட்கள் தங்கி, வேறெங்கும் கிடைத்தற்கரிய ஆகமங்கள் சிலவற்றை வாசித்தறிந்து கொண்டார். ''நாவலர்'' என்ற பட் டத்தைமட்டுமன்றி வேறு விருதுகளெவற்றையும் நாவலர் அம்மடத்தி லிருந்து பெற்றுக்கொள்ள விரும்பவில்லை.

பின்பு நாவலர் இராமநாதபுரம் சென்றபொழுது மகாராஜாவினது முதலமைச்சர் அவரைத் தமதரண்மனைக்கு அழைத்தார். ஆதீன முதல்வருடைய அழைப்பினைப் போன்றதே இதுவுமென்றாலும் அழைத்தவர் ஆத்மீகத்தலைவரல்லரே.லௌகிகத்தலைவர்களை நாவ லர் மதிப்பதில்லை. அதனால் அமைச்சருடைய அழைப்பையும் நாவ லர் ஏற்கவில்லை. ஆனால் கல்வி கேள்விகளில் சிறந்த அந்த அமைச்சர் தமது அழைப்பை நாவலர் அவர்கள் ஏற்க வேண்டுமென்று கவி புனைந்து தமது ஆஸ்தான் வித்வான்கள் மூலம் அனுப்பினார். அத னைக் கண்ணுற்ற நாவலர் தாமோ அன்றித் தம்மோடு கூட வருப வர்களோ அரசசபைக்குரிய மரியாதைகளைச் செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கக் கூடாதென்ற நிபந்தனையின் பேரில்' அங்கு சென்றார். அவரை மிகுந்த மரியாதையோடு உபசரித்து வரவேற்றுத் தமிழ் நூல்கள் பலவற்றின் கையெழுத்துப் பிரதிகளைப் பரிசோதித்து அவற்றைப் பதிப்பிப்பதற்கேற்ற வகையிலே செப்பஞ்செய்து தரவேண் டுமென்று கேட்டுக் கொண்டார். □

# இயல் 6

## இறுதி நாட்கள்

1870இல் நாவலர் இந்தியாவிலிருந்து திரும்பிவந்து இங்கே இலக்கியப்பணிகள் பலவற்றை மேற்கொண்டார். இதற்கிடையிலே யாழ்ப்பாணத்திலிருந்த மெதடிஸ்த பாடசாலையில் மாணவர்கள் விபூதி தரித்துவரக் கூடாதென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. சைவப் பிள்ளைகள் பலர் இக்கட்டளையை மீறி நடக்கவே பாடசாலை நிர்வாகம் அவர்களை வெளியேற்றிவிட்டது. கல்வி வசதியை இழந்த இம்மாணவர்கள் நாவலரிடம் வந்து தாம் கற்பதற்கேற்ற ஆங்கில பாடசாலையொன்றை ஆரம்பிக்குமாறு வேண்டிக்கொண்டனர், அவரும் தாமதமில்லாமல் அத்தகையதொரு பாடசாலையை நிறுவி மாணவர் கொடுத்த வேதனத்தைக் கொண்டே அதனை நிருவகித்தும் வந்தார். அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அதனைப் பதிந்து கொள்வதற்கு அரசாங்கம் மறுத்துவிட்டது. பொது மக்களும் நிதி உதவியளிக்க முன்வரவில்லை. விபூதி தரித்து வரக் கூடாதென்ற கட்டுப்பாட்டை மிஷன் பாடசாலையும் காலக்கிரமத்தில் தளர்த்திவிட்டது. அரசாங்க அங்கீகாரம் பெறாத பாடசாலையிலே கல்வி கற்பதனால் ஏற்படக் கூடிய பிரதிகூலங்களை மாணவரும் உணர்ந்தனர். எனவே நாவலர் ஆரம்பித்த ஆங்கில பாடசாலை நான்கு ஆண்டுகளோடு நின்றுவிட்டது.

1877 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாண மக்கள் பஞ்சத்தினாலும் வாந்திபேதி நோயினாலும் அல்லலுற்றனர். இந்தக் காலத்திலும் நாவலர் பல சேவைகளை ஆற்றியிருக்கிறார். மக்களுக்கு உதவியளித்து அவர்கள் துயர்துடைக்கவென்று நியமிக்கப்பட்டிருந்த அரச அதிகாரிகள் அப்பணியைச் செய்யாமல் மக்களை வாடவிட்டு நிவாரணப் பணிகளுக்கெனத் தம்மிடமொப்படைக்கப்பட்ட நிதியைத் தாமே கையாடி வந்தனர். இவ்வநியாயச் செயலைக்கண்ட நாவலர் மனம் பதைத்தார். இவர்கள் பொதுமக்களுக்கிழைத்த அநியாயத்தையும் இவர்களுடைய அலட்சியமான மனப்போக்கையும் பற்றி அப்பொழுது யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த தேசாதிபதியிடமே எடுத்துக் கூறி நிவாரணம் தேடினார்.

1879-ஆடியில் சுந்தரமூர்த்திநாயனாருடைய குருபூசைத் தினத்தன்று தமது பாடசாலையிலே நாவலர் தமது கடைசிப் பேருரையை

ஆற்றினார். அதுவே தமது கடைசிப் பிரசங்கமாக இருக்கும் என்று அப்பிரசங்கத்திலேயே குறிப்பிட்டார். அதே ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டாம் நாள் அவர் நோய்வாய்ப்பட்டார். மூன்று நாட்கள் தொடர்ந்து அவர் தமது ஆத்மார்த்தமான சிவபூஜையைச் செய்ய முடியாமல் குருக்கள் ஒருவரை அழைத்து புறப்பூஜையைச் செய்வித்து மானசீகமாகவே தாமும் தமது ஆத்மார்த்த பூஜையைச் செய்து கொண்டார். கடைசி நாளன்று இரவு 8 மணியளவில் தமக்குப் பக்கத்திலிருந்தவர்களைத் தேவாரம் ஓதச் செய்து தாமும் விபூதி,உருத்திராக்கம் அணிந்து கொண்டு கைகளைச் சிரசின்மேல் ஏறக்குவித்து இறைவனைத் தியானித்தபடியே பத்து மணியளவில் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டார். அப்பொழுது அவர் வயது 56 வருடம் 11 மாதமாகும்.

□

# இயல் 7

## நாவலர் என்னும் பெருந்தகை

நாவலர் பெருமான் ஆழ்ந்த சமயப்பற்றுக் கொண்டவர். அவர் ஆற்றிய பணிகள் யாவும் சமயத்தையே அடிப்படையாகக் கொண்டவை. மக்கள் சேவையே மகேசுவரன் சேவை. சைவசமயம் தமது சமயம் என்பதாலோ அன்றி, அதுவே உண்மைச் சமயம் என்பதாலோ அவர் சைவசமயத்துக்குத் தொண்டாற்றவில்லை. சிவனையே அவர் ஆராதித்தாராகையால் சைவசமயத்துக்குத் தொண்டாற்றினார். தமிழ்மொழிக்காற்றிய சேவையைக்கூடத் தமது சமயத்துக்காற்றும் தொண்டெனக் கருதி வந்தார். தமிழ்க் கல்வி எல்லையற்றது. இறைவனிடத்தே அன்பு செலுத்தவும் இறைபணி தலைநிற்கவும் அது ஒப்பற்ற ஒரு சாதனம் என்பது அவர் துணிபு

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவான்
நற்றாள் தொழாஅர் எனின்

உடலுக்கு வரும் தீங்கை அவர் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அதனால் அச்சம் என்பது அவர் அறியாததொன்றாகும். யாழ்ப்பாணத்திலும் இந்தியாவிலும் கூட அவருக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெற்றதை நாமறிவோம். இத்தகைய ஆபத்துக்களைக் கண்டும் நாவலர் சற்றும் மனம் தளராமல் தமது பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வந்தார். சமயப்பற்றுள்ளவர்களையே அவர் மதித்துப் போற்றுவார். பணமும் அதிகார பலமும் அவருக்கு அற்பமானவை. தமது பாடசாலைக்கு நன்கொடையாகக் கிடைப்பதை அவர் ஏற்றுக்கொள்வார். ஆனால் தமக்கெனத் தனிப்பட்ட முறையில் யாராவது பரிசளிக்க முன்வந்தால் அவர் ஏற்றுக்கொள்வதில்லை. திருவாவடுதுறை ஆதீன முதல்வர் சிதம்பரத்திலுள்ள நாவலருடைய பாடசாலைக்கு விஜயம்செய்தபோது நாவலருக்கெனத் அங்கவஸ்திரம் ஒன்றையும் வேட்டிகள் இரண்டையும் கொண்டு வந்து அன்பளிப்புச் செய்தார். ஏற்றுக்கொண்ட நாவலர் அவற்றுக்குரிய விலையை ஆதின முதல்வருக்கு அனுப்பி வைத்து அப்பணத்தைக் கொண்டு சிதம்பரத்தினயலிலே உள்ள மறைஞான சம்பந்தராலயத்தைச் செப்பனிடுமாறு கேட்டுக்கொண்டார். அவ்வாதீனத்தில் அடுத்துப் பட்டத்துக்கு வந்த முதல்வர் அனுப்பிய எண்பது ரூபாவையும் அங்ஙனமே வங்கி உண்டியல் மூலம் திருப்பி அனுப்பிவைத்தார். அச்சம் என்பதை அகற்றியிருந்த நாவலர் பெருமானுடைய உள்ளத்

திலே சாதாரணமாக வரும் கோபத்துக்கும் இடமில்லை. அவருடைய பரிசாரகன் ஒருநாள் ஏதோ சித்தசுவாதீனமற்ற நிலையில் ஒரு தட்டு நிறைந்த சோற்றை நாவலருடைய முகத்திலே வீசி எறிந்து விட்டான். நாவலர் ஆத்திரம் கொள்ளவில்லை. அவன் ஏன் அப்படி நடந்து கொண்டான் என்பதை அறிவதில் தமது மனக்கருத்தைச் செலுத்திக் கொண்டு சாந்தமாகவே இருந்துவிட்டார். ஆனால் நெறி முறை தவறு பவர்கள்மேல் அவருக்குண்டாகும் கோபம் அடக்கமுடியாததாகும். நாவலருடைய தமையனார் தியாகராஜர் ஒருநாள் நாவலருடைய சமயப்பற்றின் ஆழத்தை அறியும் நோக்கத்தோடு அவருடைய காது படவே பெரியபுராணக் கதைகள் யாவும் சட்டுக் கதைகள் என்று சொல்லிவிட்டார், அவ்வளவுதான், நாவலருடைய கோபம் ரௌத்ரா காரமாய் விட்டது. தமயனாரென்றும் பாராமல் அவரைத் துரத்தித் தாக்க முற்பட்டு விட்டார். தமயனாரோ அறையொன்றில ஓடி ஒளித்து உள்ளே தாட்பாளிட்டுத் தம்மைக் காத்துக் கொள்ள வேண் டியதாயிற்று. வீட்டில் உள்ளவர்கள் பின்னர் இடையிட்டு நாவலரைக் கோபந்தணியச் செய்தனர். தமது சமயத்துக்கும் நாட்டுக்கும் எவரே னும் எழுத்து வடிவில் அவதூறு செய்தால் நாவலரைத் தடுப்பதற்கு எவராலும் முடியாது. அவருடைய ஆத்திரத்துக்குக் குறுக்கே எந்தச் சக்தியும் நிற்க முடியாது. நரசிங்கபுரம் என்னுமிடத்தைச் சேர்ந்த வீராசாமி முதலியார் என்பவர் ஒருமுறை யாழ்ப்பாணத்தைப் பற்றித் தாறுமாறாக எல்லாம் ஏதோ எழுதி விட்டார். நாவலருக்கு இது தெரியவந்தது. அந்தக் கட்டுரை எழுதிய முதலியாரைப்பற்றி மாத்திர மன்றி அவருக்கு மேலே இருந்த பண்டிதரைப் பற்றிய செய்திகளை யெல்லாம் திரட்டிக் கொஞ்சமேனும் ஈவு இரக்கமின்றிக் கண்டனக் கைந்நூல் ஒன்றை நாவலர் எழுதி வெளியிட்டார். அக்கைந் நூலிலே யாழ்ப்பாண நன்னாட்டின் உயர்ந்த புகழ்மிக்க சிறப்புக்களையும் அந்த முதலியாருடைய இழிந்த மடமைகளையும் நாவலர் சாங்கோபாங்க மாக எழுதியிருந்தார். அப்பெருமைகளுள் ஒன்றை இங்கே எடுத்துக் கூறுவதும் பொருத்தமாகும். வட இந்தியாவிலிருந்து வரும் பக்தர்களும் கொண்டாடும் இராமேச்சரம் கோவிலைக் கட்டியவன் யாழ்ப்பாணத்து மன்னன் ஒருவனே என்று அக்கோவிலின் கர்ப்பக்கிருகத்துக் கல்வெட் டொன்று கூறுகிறது. அங்ஙனமே வேதாரண்யம் கோவிலைக் கட்டிய வரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தில்லைநாதத் தம்பிரான் என்பவ ராவர். தஞ்சை மன்னன் தனது மகனுக்குண்டான தீராதநோயை அத் தம்பிரான் விபூதியைக் கொண்டே தீர்த்துவைத்த நன்றிக்காக அக் கோவிலுக்கு ஏராளமான நிலங்களையும் மற்றும் நிபந்தங்களையும்

வழங்கியிருக்கிறான். இனி அவதூறு கற்பித்த அந்த முதலியாரை நாவலர் தனிப்பட்ட முறையிலும் தாக்கி எழுதியிருக்கிறார். பாடசாலை ஒன்றிலே தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த ஒருவருக்கு இந்த முதலியார் மூன்றாவது படியில் உள்ள உதவியாசிரியராயிருந்திருக்கிறார். அத்தலைமைத் தமிழ்ப் பண்டிதரோ தமிழிலக்கணத்தின் அடிப்படை அறிவுதானுமற்றவர் என்பதை அவர் பொதுப்பரீக்ஷை ஒன்றில் எழுதிய விடைத்தாளை எவ்வாறோ நாவலர் தேடி எடுத்து அதிலிருந்தே இலக்கணப் பிழைகள் பலவற்றை எடுத்துக்காட்டி அத்தகைய பண்டிதருக்கு மூன்றாம் உதவியாசிரியராயிருந்த இந்த முதலியார் கடைசியில் தகுதியின்மை காரணமாக அப்பதவியையும் பறிகொடுத்தவர் என்று அக்கண்டனக் கைந்நூலிலே சுட்டிக்காட்டியுள்ளார், தயவுதாக்ஷண்யமின்றி எழுதப்பட்ட கண்டனநூல் ஒன்றைப் படித்துச் சுவைக்க விரும்புகிறவர்களுக்கு இக்கைநூல் பெரிய விருந்தாகும்.

நாவலர் பெருமான் பொதுவாழ்விலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவராவர். தமது பாடசாலையிலே ஒருநாள் பாடம் சொல்லிக் கொண்டிருந்தபோது ''ஐயோ வீடெரிகிறதே'' என்ற அவலக்குரல் கேட்டது, குரல் வந்த திசை நோக்கி நாவலர் அம்புபோலப் பாய்ந்து சென்று அயலவர்களோடு சேர்ந்து தாமும் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். மற்றொரு சமயம் தமது மாணவர் ஒருவர்க்கு அம்மைநோய் கண்டது. அந்த இடத்துக்குச் செல்வது அபாயம் என்று பலர் எச்சரிக்கவும் அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது தினமும் அந்நோயாளியைப் போய்ப் பார்த்து உதவி செய்து வந்தார். அரசியலிலே கூட நாவலர் தமது பங்கைச் செலுத்தியிருக்கிறார், சட்டநிருபண சபையிலே சர். முத்துக்குமாரசுவாமி அவர்களுடைய இடத்துக்குத் தமிழ் அங்கத்தவரொருவரைத் தெரிவு செய்யவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அந்த இடத்துக்குத் திருவாளர் சீ. பிறிற்றோ என்ற நியாயதுரந்தருடைய பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டது இவர் நாவலருக்குற்ற நண்பராயிருந்தும் அப்பதவிக்குரிய தகைமைகள் இவருக்கில்லையென்பதை உணர்ந்த நாவலர் திருவாளர் பொ. இராமநாதன் (சேர் பட்டம் பின்னர்தான் கிடைத்தது) அவர்களை ஆதரித்துப் பல கூட்டங்களைக் கூட்டிப் பேசி வந்தார்.

இங்ஙனம் சிறந்த ஒரு கல்விமானாய், நூலாசிரியராய், போதனாசிரியராய், பிரசாரகராய், ஆதர்சபுருஷராய், சீர்திருத்தவாதியாய், ஆற்றல் மிக்க இயற்கை விவேகியாய், அயராத உழைப்பாளியாய், தமிழ்த்தாயின் தவப்புதல்வராய், சைவசமயப் பற்றுமிக்கவராய் இறைபக்தியில் தலை நின்றவராய் விளங்கிய நம் நாவலர் பெருமானைப் போல ஒருவரைத் தமிழுலகம் காணப் பல நூற்றாண்டுக் காலமாகத் தவமிருக்க வேண்டும். □□

## தேசியக்கல்வி இயக்கத்தை நாவலருக்குப்பின் துரிதப்படுத்தியவர் சைவப் பெரியார்

*கல்வி மரபு யாது? பிள்ளைகள் தம் முந்தையர் கடைப்பிடித்து வந்த சமய கலாசாரச் சூழலிலே கல்வி கற்றலையே குறிக்கும் ...... நாவலர் பெருமானின் கல்வித் திட்டத்தின் மூலக்கருத்து இதுவே. அவர் வளர்த்த இயக்கம் இந்த அடிப்படை உண்மையைப் பிரதிபலிக்கிறது. ஆங்கிலம் படிக்கப்போன நாவலர் அந்தச் சூழ்நிலையில் உண்மைக் கல்வி நிகழ்ந்ததா என்பதை உற்று நோக்கினார்; தம்மை முற்றும் மாற்றிக்கொண்டு உண்மையான தேசியக் கல்வியின் தொண்டனாகவும் தலைவனாகவும் செயல் புரிந்தார்; ஒரு மாணவர் பரம்பரையை உருவாக்கினார். யாழ்ப்பாணத்தில் தமிழ்மணம், சைவ மணம் என்றால் அவை நாவலரால் உண்டானவை. அது இன்றும் நிலைத்திருக்கிறதென்றால் மாணவர் பரம்பரை முற்றிலும் அருகிப் போகவில்லை என்பது கருத்து.*

தேசியக் கல்வி இயக்கத்தை நாவலருக்குப் பின் துரிதப்படுத்தியவர் சைவப்பெரியார். அவர் வாழ்ந்த காலம் ஆங்கிலக் கல்வியின் செல்வாக்கு நாளுக்குநாள் அதிகரித்த காலம். எனவே ஆங்கில-கிறிஸ்தவ கல்லூரிகளின் ஆதிக்கம் உச்சநிலையை அடைந்தகாலம் அது. சைவப்பிள்ளைகள் பைபிள் பாடத்தை கேம்பிறிட்ஜ் கனிட்ட, சிரேட்ட பரீட்சைகளுக்குப் படித்த காலம். சைவப் பெரியாரே பைபிள் பாடத்தை மிகத் திறமையாகப் படிப்பித்த நல்லாசான். ஆயின் சைவ சமயம் எங்கே? மதமாற்றம் பாதிரிமார் உள்ளத்தில் மூளாத் தீபோல் உள்ளே கனன்ற காலம் அது.

ஓய்வு பெற்றுக் கந்தவனப் பதியிலே தமது வானப்பிரஸ்த வாழ்வைத் தொடர்ந்து நடத்திவந்த காலத்தில் சைவப்பெரியாருக்கு இலங்கை அரசு விட்ட அழைப்பு கல்விச் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்த உதவியது. இதற்குமுன் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபராகவும் மானிப்பாய் இந்துக் கல்லூரி, திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரிகளில் தலைமை ஆசிரியராகவும் உயர் கல்வியளித்து அவர் சமயம் வளர்த்தார். நாவலரின் சீடர்கள் கட்டி எழுப்பிய யாழ். இந்துக்கல்லூரி போதாதென்று சேர். பொன்னம்

பலம் இராமநாதனைத் தூண்டுவித்துப் பரமேஸ்வரக் கல்லூரியை நிறுவுவித்தவர் சைவப்பெரியார் என்பது இன்று பலருக்குத் தெரியாது. சேர் இராமநாதனின் ஆலோசனை கொண்டு திரு. சு. இராசரத்தினத்தின் நிர்வாகத்தில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை நிறுவ ஊக்கியவராகவும் வித்தியாவிருத்திச் சங்கத் தலைவராகவும் விளங்கியவர்.

கல்வி மந்திரி கன்னங்கரா 1940 இல் நியமித்த கல்வி ஆய்வுக் குழுவில் சைவப்பெரியார் அங்கம் வகித்து, சிறந்த கல்விக் கருத்துகளை விளக்கிக் குழுவின் மதிப்புப் பெற்றவர். அந்தக் குழுவே நாட்டுக்கு இலவசக் கல்வியைப் பரிந்துரைத்தது. இதன் விளைவை விரிக்க வேண்டியதில்லை. புரட்சிகரமான மாற்றம் கல்வித் துறையில் ஏற்பட இது வழி வகுத்தது. அந்தக் குழுவின் அறிக்கையில் இடம்பெற்ற சைவப்பெரியார் திரு. சு. சிவபாதசுந்தரரின் கருத்து அவரது தீர்க்க தரிசனத்தை எடுத்துக் காட்டுவதோடு நாவலரின் நீண்டகாலப் பேராசை செயற்படும் திறனையும் உண்டாக்கியது.

" The grant - in - aid system should be abolished and all Schools should be state Schools. Those bodies and individuals who own Schools would oppose the abolition as their business would come to a stand still, but that is not concern of the country.

The freedom of the child is of infinitely greater value than the freedom of the parent born with religious indifference. Of all freedoms religious freedom is most precious. "

இது சைவப்பெரியாரின் புரட்சிகரமான கருத்து. புரட்சிகரமான பாதையைச் சுட்டிக் காட்டுவதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். பௌத்த சமய, இஸ்லாமிய சமயப் பிள்ளைகளுக்கும் விடிவு காணும் வழி சைவப்பெரியார் சிந்தையில் உதயமாகி, மகாத்மா காந்தியின் ஆங்கில உரைநடைப் பாங்கில் வெளிவந்த கருத்து அது. ஆயினும் இக்கருத்தைச் செயற்படுத்த இலங்கை அரசாங்கத்திற்குப் பதினேழு ஆண்டுகள் தேவைப்பட்டன.

எனவே நாவலர் பற்றிய நூல் எழுதச் சைவப்பெரியார் எல்லா வகையிலும் தகுதியுடையவர் என்பதை எவரும் மறுக்கார்.

ந. சபாரத்தினம் 'நாவலரும் சைவப்பெரியாரும்' என்ற தலைப்பகத்தில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி.

( நாவலர் நூற்றாண்டு மலர் 1979 )